# பத்துப்பாட்டு
# ஐம்பத்தேழு கதைகள்

மு. சுயம்புலிங்கம்

M S R கிரியேஷன் வெளியீடு

## நூல் விபரப் பட்டியல்

தலைப்பு : பத்துப்பாட்டு ஐம்பத்தேழு கதைகள்
ஆசிரியர் : **மு. சுயம்புலிங்கம்**
உரிமை : ஆசிரியர்க்கு
முதல் பதிப்பு : 2025
மொழி : தமிழ்
கணிணி : வியாழம் கணிணி அச்சகம்.
அச்சாக்கம் : காரணைப்புதுச்சேரி-603 202.
வெளியீடு : **M S R** கிரியேஷன்
பிளாட் நம்பர்: 2,3 (வெஸ்டர்ன் பார்ட்)
பாலாஜி நகர் மெயின் ரோடு
ஸ்ரீ பாலாஜி நகர் புதுப்பெருங்களத்தூர்
சென்னை - 600 063.
மு. சு. ரிஷி Ph : 9840370200
மு. சுயம்புலிங்கம் Ph : 9003196380

**Pathuppattu Impathezhu Kathaikal**

| | | |
|---|---|---|
| Subject | : | Tamil Literature Stories From Pathuppattu |
| Author | : | M. Suyambulingam |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Size of Book | : | Demy 1x8 |
| Point Size | : | 12 |
| No. of Pages | : | 180 |
| No. of Copies | : | 100 |
| Type & Design | : | Jupitar DTP 9962241090 |
| Printer | : | Kabali Press. Ch-91. |
| Publisher | : | **M S R CREATION** Chennai - 600 063. |
| **Price** | : | **150/-** |


# அணிந்துரை


NISHANTH
HOMEO CLINIK
"Bringing New Life Through Advanced Homeopathy"

**Dr. J. JOICE THILAGAM,**
D.H.M.S., M.D., MF (HOM)., D.P.H.S., M.Sc (Psy)., M.Phil., MA. (SOC)
Reg No. 112-A
Rtd-Medical Officer. Corporation of Chennai

IAAI - Authorised
Reg. Member of Tamilnadu Homoeopathic Medical Council
Member of Tamilnadu Homoeopathic Medical Association
Member of Malaysian Society Of Complementary Medicine
Life Member - (IAOH)
Life Member of Indian Women Scientist Association
Treasurer - Pavithram (NGO)
Sevarathna - Awardee


## சங்கப் பாடல்களுக்கு
### கதைகள் சொல்லும் அரிய சாதனை

திரைக்கதையில் அங்கங்கே கதைக்கேற்றவாறு பாடல் எழுதுவார்கள்.

கதைக்குப் பாட்டு!

திரைப்பாட்டுக்கு மெட்டுப் போடுவார்கள்.

ஆனால் திரு மு.சுயம்புலிங்கம் அவர்கள் சங்க இலக்கியப் பாடல்களுக்கு ஏற்றவாறு ஒரு பக்கக் கதைகள் எழுதியுள்ளார்.

பாடல்கள் தருகின்ற செய்திகளை வைத்து கதைகள் எழுதுகின்றார்; புனைகின்றார். பொருள் புரியப் பதிய வைக்கின்றார்.

திருக்குறளுக்கு கதை எழுதியுள்ளார்கள் பலர். அது போல சங்க இலக்கியங்களான ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றுக்கு ஆங்காங்கே பாடல்களுக்குத் தகுந்தவாறு உரையோ, ஆய்வுரையோ எழுதாது, பாடலின் பொருள் புரியும் வண்ணம் கதைகள் எழுதியுள்ளது மிகவும் பாராட்டத் தக்கது.

கதை சொல்லிப் பாடலுக்குப் பொருள் கூறுதல் ஒரு சிறந்த யுக்தி. சில பாடல்கள் சொல்லும் பொருளை – அதன் செய்திகளை அப்படியே படம் பிடித்துக் காட்டும் வண்ணம் எளிய, இனிய தமிழ் நடையில் விளக்கிச் சொல்லியும் உள்ளார்.

சங்க இலக்கியத்தின் பாடல் எண்கள், பாடல் வரிகள் குறிப்பிட்டு அதற்குத் தகுந்தவாறு கதைகள்– செய்திகள் சொல்லுவது ஒரு தனித்துவமான அணுகுமுறை. சங்கப் பாடல்களைத் தாம் முதலில் உள்வாங்கி பாடல்கள் கூறும் முழுப் பொருளையும் உணர்ந்து, அப்படியே அதனைத் தெள்ளிய கதையாகச் சொல்வது மிக அருமையாக– அற்புதமாக - அதிசயமாக - அரியதாக அறியத் தக்க வகையில் கூறுவது சிறப்பு.

சங்கப் பாடலின் வரிகளுக்கு ஏற்ப அதனை மட்டும் எடுத்துச் சொல்ல வேண்டும். தனது கற்பனைகளை ஏற்றியும், மிகைப்படுத்திச் சொல்லாதவாறும், சங்கப் பாடலின் பொருளை ஒன்று கூடவிட்டு விடாமல் சொல்லுவதும், பாடல்தன்மை மாற்றி வேறு ஒரு பொருள் கூறாமலும், பாடலின் கதைகள் உள்ளது உள்ளபடியே, அப்படி அப்படியே பொருள்பட உள்ளன. கதை எழுதும் ஆற்றல் அது மிகப் பெரிய ஆற்றல், திரு மு. சுயம்புலிங்கம் அவர்களுக்கு சுயமாக கைவந்த கலையாக இந்த ஆற்றல் அமைந்துள்ளது.

சங்கப் பாடல்களுக்கு உரை எழுதி அதைப் புரிந்து கொள்ளுதலை விட, கதை மூலம் கூறிப் புரிய வைக்கும் பாணி மக்களுக்கும் குறிப்பாகக் குழந்தைகளுக்கும் எளிதாகச் சென்றடையும்.

விருதுகள் பெற்ற அருமை எழுத்தாளர் மு.சுயம்புலிங்கம் அவர்கள் மேலும், மேலும் இவை போன்ற மற்ற இலக்கியங்களுக்கும் சீரான சிறு கதைகள் மூலம் விளக்கிச் சொல்லி, புதிய வரலாற்றுச் சாதனைகள் புரிந்து மக்கள் பார்வையில் மாபெரும் எழுத்தாளராகப் பவனி வர வேண்டும் என்று அவரது எழுத்தாற்றலைப் பாராட்டி, அவரை வாழ்த்தி, மனதாரப் போற்றுகின்றேன்.

21/8/25

NISHANTH HOMEO CLINIK
"Bringing New Life Through Advanced Homeopathy"

**Dr. J. JOICE THHILAGAM,**
D. H. M. S., M.D., MF (Hom)., D. P. H. S., M. Sc (Psy)., M. Phil., M A. (SOC)
Reg : 112-A
Rtd - Medical Officer. Corporation of Chennai. IAAI Authorised
Reg. Member of Tamilnadu Homoeopathic Medical Council
Member of Tamilnadu Homoeopathic Medical Association
Member of Malaysian Society of Complementary Medicine
Life Member - (I A O H)
Life Member of Indian Women Scientist Association
Treasurer - Pavithiram. (N G O) Sevarathna - Awardee.

*(வாசிப்பதற்கு வசதியாக பெரிதாக்கப்பட்ட எழுத்துருவில்)*

# அணிந்துரை

## சங்கப் பாடல்களுக்கு

## கதைகள் சொல்லும் அரிய சாதனை

திரைக்கதையில் அங்கங்கே கதைக்கேற்றவாறு பாடல் எழுதுவார்கள்.

கதைக்குப் பாட்டு.

திரைப்பாட்டுக்கு மெட்டு போடுவார்கள்.

ஆனால் திரு. மு. சுயம்புலிங்கம் அவர்கள் சங்க இலக்கியப் பாடல்களுக்கு ஏற்றவாறு ஒரு பக்கக் கதைகள் எழுதியுள்ளார்.

பாடல்கள் தருகின்ற செய்திகளை வைத்து கதைகள் எழுதுகின்றார். புனைகின்றார். பொருள் புரியப் பதிய வைக்கின்றார்.

திருக்குறளுக்கு கதை எழுதியுள்ளார்கள் பலர், அது போல சங்க இலக்கியங்களான ஐங்குறு நூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றுக்கு ஆங் காங்கே பாடல்களுக்குத் தகுந்தவாறு உரையோ, ஆய்வுரையோ எழுதாது, பாடலின் பொருள் புரியும் வண்ணம், கதைகள் எழுதியுள்ளது மிகவும் பாராட்டத்தக்கது.

கதை சொல்லிப் பாடலுக்குப் பொருள் கூறுதல் ஒரு சிறந்த யுக்தி. சில பாடல்கள் சொல்லும் பொருளை - அதன் செய்திகளை அப்படியே படம் பிடித்துக் காட்டும் வண்ணம் எளிய, இனிய தமிழ்நடையில் விளக்கிச் சொல்லியும் உள்ளார்.

சங்க இலக்கியத்தின் பாடல் எண்கள், பாடல் வரிகள் குறிப்பிட்டு அதற்குத் தகுந்தவாறு, கதைகள் - செய்திகள்

சொல்லுவது ஒரு தனித்துவமான அணுகுமுறை.

சங்கப் பாடல்களைத் தாம் முதலில் உள்வாங்கி பாடல்கள் கூறும் முழுப் பொருளையும் உணர்ந்து, அப்படியே அதனைத் தெள்ளியக் கதையாகச் சொல்லுவது மிக அருமையாக - அற்புதமாக - அதிசயமாக - அரியதாக அறியத் தக்க வகையில் கூறுவது சிறப்பு,

சங்கப் பாடலின் வரிகளுக்கு ஏற்ப அதனை மட்டும் எடுத்துச் சொல்ல வேண்டும். தனது கற்பனைகளை ஏற்றியும், மிகைப்படுத்திச் சொல்லாதவாறும், சங்கப் பாடலின் பொருளை ஒன்று கூட விட்டுவிடாமல் சொல்லுவதும், பாடல் தன்மை மாற்றி வேறு ஒரு பொருள் கூறாமலும், பாடலின் கதைகள் உள்ளது உள்ளபடியே, அப்படி அப்படியே பொருள்பட உள்ளன. கதை எழுதும் ஆற்றல் அது மிகப் பெரிய ஆற்றல், திரு. மு. சுயம்புலிங்கம் அவர்களுக்கு சுயமாக கைவந்த கலையாக இந்த ஆற்றல் அமைந்துள்ளது.

சங்கப் பாடல்களுக்கு உரை எழுதி அதைப் புரிந்து கொள்ளுதலைவிட, கதை மூலம் கூறிப் புரிய வைக்கும் பாணி மக்களுக்கும் குறிப்பாக குழந்தைகளுக்கும் எளிதாக சென்றடையும்.

விருதுகள் பெற்ற அருமை எழுத்தாளர் மு. சுயம்பு லிங்கம் அவர்கள் மேலும், மேலும் இவை போன்ற மற்ற இலக்கியங்களுக்கும் சீரான சிறு கதைகள் மூலம் விளக்கிச் சொல்லி புதிய வரலாற்றுச் சாதனைகள் புரிந்து மக்கள் பார்வையில் மாபெரும் எழுத்தாளராகப் பவனி வர வேண்டும் என்று அவரது எழுத்தாற்றலைப் பாராட்டி, அவரை வாழ்த்தி, மனதாரப் போற்றுகின்றேன்.

21/8/25



## சமர்ப்பணம்

எங்க பெரியம்மா, ஆழ்வார் அம்மாஅவர்களுக்கும்
எங்க பெரியய்யா, மகாலிங்க நாடார் அவர்களுக்கும்.





| | | |
|---|---|---|
| திருமுருகாற்றுப்படை | | NIL |
| பொருநராற்றுப்படை | – | 4 |
| பெரும்பாணாற்றுப்படை | – | 8 |
| சிறுபாணாற்றுப்படை | – | 2 |
| முல்லைப்பாட்டு | – | 1 |
| மதுரைக்காஞ்சி | – | 14 |
| நெடுநல்வாடை | – | 1 |
| குறிஞ்சிப்பாட்டு | – | 3 |
| பட்டினப்பாலை | – | 8 |
| மலைபடுகடாம் | – | 16 |
| கதைகள் மொத்தம் | | 57. |



## ஆசிரியர் உரை

சங்க இலக்கியத்தில் "பத்துப்பாட்டு" என்று ஒரு புத்தகம் இருக்கிறது. இது, ரொம்ப நல்ல புத்தகம் . மக்கள், அன்று வாழ்ந்த வாழ்க்கையை, தமிழ் புலவர்கள், ரொம்ப அருமையாக எழுதியிருக்கிறார்கள். பெரும் புலவர் மாங்குடி மருதனார், மதுரை மாநகரில் வீடுகளில் கன்னக்கோல் வைத்து கொள்ளையடிக்கிற, ஒரு, கொள்ளைக்காரனைப் பற்றிச் சொல்கிறார்: "அவன் நீல நிறத்தில் உடை அணிந்திருக்கிறான். அவன், இருட்டில் வருவது தெரியவேயில்லை அவன் தோல் செருப்பு அணிந்திருக்கிறான். அவன் நடக்கும்போது அந்த செருப்பில் இருந்து சத்தம் வரவேயில்லை. அவனிடம் ஒரு நூல் ஏணி இருக்கிறது. அந்த மெல்லிய நூல் ஏணியை அவன் இடுப்பில் சுற்றி ஒளித்து வைத்திருக்கிறான். அவனிடம் கூர்மையான ஒரு குத்துவாள் இருக்கிறது. அவன் அந்தக் குத்துவாளை அவன் காலோடு சேர்த்துக் கெட்டி மறைத்து வைத்திருக்கிறான். அவனிடம் கல்லை அறுக்கவும், மரத்தை அறுக்கவும், மண்ணைத் தோண்டவும் கருவிகள் இருக்கிறது. அவன் அந்தப் பெரிய தெருவில், ஒரு பெரிய வீட்டில் கன்னக்கோல் வைத்து கொள்ளையடிக்க பதுங்கிப் பதுங்கி வந்து கொண்டிருக்கிறான். அந்தப் பெரிய தெருவில் பாண்டிய மன்னனின் ஒரு

பெரிய காவல் அதிகாரி "இரவுப்பாரா" வந்து கொண்டிருக்கிறார். அந்தக் கொள்ளைக்காரன், அந்தக் காவல் அதிகாரியைப் பார்த்ததுதான் தாமதம், அவன் ஓட்ட மாய் ஓடி கண்ணை மூடி முழிப்பதற்குள் தப்பி விட் டான்." இப்படி ஏராளமான தகவல்கள் சுயம்புலிங்கம் எழுதிய இந்தப் பத்துப்பாட்டுக் கதைகளில் இருக்கிறது.

பாசத்துடன்

**மு. சுயம்புலிங்கம்**

**11-04-2025.**



## கதை - 1
## பலிச்சோறு.

ஒரு கிராமம்.

அந்தக் கிராமம், ஒரு பெரிய கடற்கரையில் இருக்கிறது. அந்தக் கடற்கரையில் ஒரு தென்னந்தோப்பு இருக்கிறது, அந்தத் தென்னந் தோப்பில், ஒரு வீடு இருக்கிறது அந்த வீட்டின் முன்னால் இரண்டு நொச்சிச் செடிகள் இருக்கிறது.

ஒரு செடியின் நிழலில் ஆமைக்குட்டிகள் கெடக்கு. இன்னொரு செடியின் நிழலில் சோறு இருக்கு. அது பலிச்சோறு. அரிசிச் சோத்தை ஆட்டுக் குட்டியின் ரத்தத்தில் கலந்தது அது.

அந்தப் பலிச் சோத்தை, ஒரு காக்கா, ஆவலோடு விழுங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் காக்கா அந்தப் பலிச் சோத்தை, விழுங்கி விழுங்கி அந்தக் காக்காய்க்கு வயிறு நிறைந்து விட்டது. இனி அந்தக் காக்காயால் ஒரு பருக்கை கூட விழுங்க முடியாது. அந்தக் காக்கா, அங்கிருந்து எழும்புகிறது. அது, றெக்கைகளை விரிக்கிறது. அந்தச் சமயத்தில், அந்தக் காக்கா, அந்த ஆமைக் குட்டிகளைப் பார்க்கிறது.அந்த ஆமைக் குட்டிகளைத் திங்கணும் என்று,

அது ஆசைப்படுகிறது. ஆனாலும் அந்தக் காக்கா ஆமைக் குட்டிகளிடம் போகவில்லை.

அந்தக் காக்கா, ஒரு மரத்தில் உட்கார்ந்தி ருக்கிறது. அது அந்த ஆமைக்குட்டிகளையே பார்த்துக் கொண்டிருக்கிறது.

அந்தக் காக்கா தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறது:

வயிறு பசிக்கட்டும்...அதுவரைக்கும் இங்கேயே உட்கார்ந்திருப்போம்..வயிறு நல்லா பசிச்சதுக்குப் பிறகு, அந்த ஆமைக்குட்டிகளைத் திங்கலாம்...

அந்தக் காக்கா, அந்த மரத்திலேயே உட்கார்ந் திருக்கிறது.

முடத்தாமக் கண்ணியார்
பொருநர் ஆற்றுப்படை.
பத்துப்பாட்டு
அடிகள் - 177 முதல் 186 வரை.



" ஒல்லெனத்
திரை பிறழிய இரும் பௌவத்துக்
கரை சூழ்ந்த அகன் கிடக்கை,
மா மாவின் வயின் வயின் நெல்,
தாழ் தாழைத் தண் தண்டலை,
கூடு கெழீஇய, குடிவயினான்,
செஞ் சோற்ற பலி மாந்திய,
கருங் காக்கை கவர்வு முனையின்,
மனை நொச்சி நிழல் ஆங்கண்,
ஈற்று யாமை தன் பார்ப்பு ஓம்பவும்."

## கதை - 2.

## ஒலி மாசு

ஒரு வயல்.

அது ரொம்பப் பெரிய வயல். அந்த வயலில், ஏகப் பட்ட பறவைகள், நின்று கொண்டிருக்கிறது. அந்தப் பெரிய வயலில், ஒரு நாரை மட்டும் தனியாக நின்று கொண்டிருக்கிறது. அந்த வயலில் அறுவடை செய்ய குடி யானவர்கள்வந்திருக்கிறார்கள். அவர்கள் அறுவடையை ஆரம்பிப்பதற்கு முன்னால், அந்தப் பறவைகளைத் துரத்து கிறார்கள்.

அந்தக் குடியானவர்கள், பறை அடிக்கிறார்கள். அவர்கள் விசிலும் அடிக்கிறார்கள். அந்தக் குடியானவர்கள் கைகளைச் சத்தமாகத் தட்டவும் செய்கிறார்கள்.

அமைதியாக இருந்த அந்தப் பெரிய வயல், இப் போது சத்தக்காடாகிவிட்டது. அந்த நாரைக்கு. இந்தக் காட்டுச் சத்தம் பிடிக்கவில்லை. அது அங்கிருந்து பறந்து வெளியேறி விட்டது.

அந்த நாரை, பறந்து பறந்து ஒரு பெரிய கடற் கரைக்கு வந்திருக்கிறது. அங்கே ஒரு புன்னை மரம் இருக்கிறது. அந்த நாரை அந்தப் புன்னை மரத்தில்



உட்காருகிறது.

அந்தப் பெரிய கடலில், பெரிய பெரிய அலைகள், பெருஞ் சத்தத்தோடு எழும்புகின்றன. அந்தப் பெரிய கடல் ஓய்வில்லாமல் முழங்கிக் கொண்டிருக்கிறது. இந்த இரைச்சல் அந்த நாரைக்குப் பிடிக்கவில்லை.

அந்த நாரை, அந்தப் பெரிய கடற்கரையிலிருந்து வெளிறேி விட்டது. அது ரொம்பத் தூரம் பறந்து ஒரு பெரிய பனங்காட்டுக்கு வந்திருக்கிறது. அந்த நாரை அங்கே உயரமான ஒரு பனை மரத்தில் அமைதியாக உட்கார்ந்திருக்கிறது.

முடத்தாமக் கண்ணியார்.
பொருநர் ஆற்றுப்படை.
பத்தப்பாட்டு

*அடிகள் - 193 முதல் 207 வரை.*

*" அரி நெல்லின்*
*இனக் களமர் இசை பெருக*
*,.... ..... ..... .....*
*சுற வழங்கும் இரும் பௌவத்து,*
*இறவு அருந்திய இன நாரை,*
*பூம் புன்னைச் சினைச் சேப்பின்,*
*ஓங்கு திரை ஒலி வெரீஇ,*
*தீம் பெண்ணை மடல் சேப்பவும். "*



**கதை – ௩.**

## பூஞ்சோலை

ஒரு சிறிய பூஞ்சோலை.

அது ரொம்ப அழகான பூஞ்சோலை.

அந்தப் பூஞ்சோலைக்குப் பக்கத்தில், ஒரு கடல் இருக்கிறது. அது ரொம்பப் பெரிய கடல். அந்தக் கடல் அலைகள், குருத்து மண்ணைக் கொண்டு வந்து கொண்டு வந்து அந்தக் கடற்கரை நெடுகிலும், குவித்து வைத்திருக் கிறது. அழகான அந்தக் குருத்து மண்மேல் இருக்கிறது அந்தப் பூஞ்சோலை,

அழகான அந்தப் பூஞ்சோலையில் அழகான ஒரு சின்ன வண்டு பாடிக்கொண்டிருக்கிறது. அது பாடுகிற பாட்டு ஒரு கலைஞனின் வீணையிலிருந்து வருகிற இசையைப் போல் இனிமையாக இருக்கிறது.

அந்தச் சோலையில் ஒரு மயில் இருக்கிறது. அது, அழகான மயில். அது, அந்த வண்டு பாடுகிற பாட்டை ரசித்துக் கேட்டுக் கொண்டிருக்கிறது. அந்த மயில் அந்தச்

*சின்ன வண்டின் பாட்டுக்குத் தகுந்தபடி தோகை விரித்து ஆடுகிறது.*

*முடத்தாமக் கண்ணியார்.*
*பொருநர் ஆற்றுப்படை*
*பத்துப்பாட்டு*
*அடிகள் - 211 முதல் 213 வரை.*



*" யாழ் வண்டின் கொளைக்கு ஏற்ப,*
*கலவம் விரித்த மட மஞ்ஞை*
*நிலவு எக்கர்ப் பல பெயர. "*

## கதை -4.
## பஞ்சம்.

இந்த வருசம் மழை பெய்யவில்லை.

அருவிகளில் தண்ணீர் இல்லை.

வெயில் சுட்டுப் பொசுக்குகிறது.

காடுகளில் புல், பூண்டுகள் காய்ந்து விட்டது.

மரங்கள் எல்லாம் பட்டுவிட்டன.

எப்போதும் பச்சைப் பசேலென்று பசுமையாக இருக்கும் கஞ்சாச் செடிகள் கூட கருகி விட்டது.

ஒரு பஞ்சம் வந்திருக்கிறது.

பெரிய பஞ்சம்.

இந்தப் பஞ்ச காலத்திலும் காவிரியில், எப்போதும் போல் வெள்ளம் கரைபுரண்டு வந்து கொண்டிருக்கிறது. ஊர்கள் தோறும், ஊர்கள் தோறும் மக்கள் காவிரியில் படித்துறையில் குளித்துக் கொண்டிருக்கிறார்கள். காவிரி, தன்னுடைய பெரிய முதுகில் நறுமணப் பொருட்களைச் சுமந்து கொண்டு வருகிறது. அது கொண்டு வருகிற நறுமணப் பொருட்களை ஊர்கள் தோறும், காவிரியில்



குளித்துக் கொண்டிருக்கிற மக்களிடம் கொடுத்துவிட்டுப் போகிறது.

முடத்தாமக் கண்ணியார்.
பொருநர் ஆற்றுப்படை
பத்துப்பாட்டு
அடிகள் - 232 முதல் 241 வரை.

"...........................பண்மாண்
எல்லை தருநன் பல் கதிர் பரப்பி,
குல்லை கரியவும், கோடு எரி நைப்பவும்,
அருவி மாமலை நிழத்தவும். மற்றக்
கருவி வானம் கடற்கோள் மறப்பவும்,
பெரு வறனாகிய பண்பில் காலையும்,
நரையும் நரந்தமும் அகிலும் ஆரமும்,
துறை துறை தோறும், பொறை உயிர்த் தொழுகி
நுரைத் தலைக்குரைப் புனல்வரைப்பு
அகம் புகுதொறும், புனல் ஆடு
மகளிர் கதுமெனக் குடைய. "



**கதை- 5.**

## பாலைவனத்தில் ஒரு ஊர்.

ஒரு சின்ன ஊரு.

அந்தச் சின்ன ஊரு ஒரு பாலைவனத்தில் இருக்கிறது. அந்த ஊருல கொஞ்சந்தான் வீடுகள் இருக்கு.

அந்தச் சின்ன ஊருல ஒரு வீட்டிலேயும் பொம்பளையாளுக்க இல்ல. அவுக எல்லாரும் காட்டுக்குப் போயிருக்காவ.

அந்தச் சின்ன ஊருல, ஒரு சின்ன வீடு. அந்த வீட்டின் முற்றத்தில் ஒரு பந்தல் இருக்கு. ஒரு பெண் மானை அந்தப் பந்தலில் கட்டிப் போட்டிருக்கு. அந்தப் பெண் மான் ஒரு பார்வை மான். வேடர்கள் இந்தப் பார்வை மானை காட்டுக்குக் கொண்டுகிட்டுப் போவாக. அவர்கள் காட்லயிருந்து காட்டு மான்களைப் பிடிச்சிகிட்டு வருவாக. அந்தப் பார்வை மானின் முட்டி தேய்ஞ்சிருக்கு. அந்த மானுக்கு முன்னஙகால் முட்டிகளில் முடி இல்லை.

அந்த முற்றத்தில் ஒரு உரல் இருக்கு. அது ஒரு நில உரல், ஒரு கல் தச்சன் அங்கிருந்த ஒரு பாறையில் இந்த நில உரலைத் தோண்டியிருக்கான். அந்த உரலுக்குப் பக்கத்தில் ஒரு உலக்கை இருக்கு. அந்த உலக்கை குட்டையா இருக்கு.

அது கருங்காலி மரத்தில் செய்தது. அந்தச் சின்ன வீட்டில் ஒரு பெண் படுத்திருக்கிறாள்.

இப்பத்தான் அவ ஒரு குழந்தை பெத்திருக்கா. தாயும் மகளும் ஒரு மான் தோலில் படுத்திருக்காவ.

அந்தச் சின்ன வீட்டில் ஒரு அடுப்பு இருக்கு. அந்த அடுப்பு உடைந்து மூளியா இருக்கு. அந்த அடுப்பு மேல் ஒரு பானை இருக்கு. அது சோத்துப் பானை. அது மண் பானை. அந்த மண் பானையின் வாய் வளையம் உடைந்து அந்த சோத்துப் பானையும் மூளியா இருக்கு.

அந்த ஊருல காரை அரிசிதான் பொங்குதாவ. அவிய அரிசிய தீட்ட மாட்டாவ. அவிய, அரிசிய கழனி பெனையவும் மாட்டாவ,

அந்தச் சின்ன வீடு ஒரு குடிசை. ஈச்ச ஓலைகளால் வேய்ந்த குடிசை. அந்த ஈச்ச ஓலைகளின் முனையில் முள் இருக்கு. அது, ரொம்பக் கூர்மையான முள்எலிகள், அந்த முள்ளுக்குப் பயந்துகிட்டு அந்த வீட்டுக்குள் வராது. அந்த முள்ளுக்குப் பயந்துகிட்டு அணில்களும் அந்த வீட்டுக்கு விளையாட வராது.

அந்த ஊருல ஒரே ஒரு கிணறுதான் இருக்கு. அது ரொம்ப ஆழம். அந்தக் கிணத்துல, ஊற ஊறத்தான் தண்ணி இறைக்கணும். அந்தத் தண்ணி குடிக்க நல்லாவே இருக்காது. அது சவர் தண்ணி,

காட்டுக்குப் போன அந்த ஊர் பொம்பளயாளுக்க ஒரு புற்றைத் தோண்டிக்கிட்டுருக்காவ. அது ஒரு எறும்புப் புற்று. அவிய காடு வெட்டியால் அந்தப் புற்றை உடைத்து உடைத்து அதை ஆழமா தோண்டியிருக்காவ. அந்த புற்றின்



அடியில் நெறையா கம்பம்புல் இருக்கு. அந்தக் கம்பம்புல்லைப் பார்த்ததும் அவியளுக்கு சந்தோசம்னாச் சந்தோசம் அவ்வளவு சந்தோசம். அவர்கள் அந்த சந்தோசத்தில் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
பெரும் பாணாற்றுப் படை.
பத்துப் பாட்டு
அடிகள் - 83 முதல் 100 வரை.

*" நீள் அரை இலவத்து அலங்கு சினை பயந்த*
*பூளை அம் பசுங்காய் புடை விரிந்தன்ன,*
*வரிப்புற அணிலொடு கருப்பை ஆடாது,*
*யாற்று அறல் புரையும் வெரிநுடைக், கொழு மடல்,*
*வேல் தலை அன்ன வைந் நுதி, நெடுந் தகர்,*
*ஈத்து இலை வேய்ந்த எய்ப் புறக் குரம்பை,*
*மான் தோல் பள்ளி மகவொடு முடங்கி,*
*ஈன் பிணவு ஒழியப் போகி, நோன் காழ்,*
*இரும்பு தலை யாத்த திருந்து கணை விழுக் கோல்,*
*உளி வாய்ச் சுரையின் மிளர மிண்டி,*
*இரு நிலக் கரம்பைப் படு நீறு ஆடி,*
*நுண் புல் அடக்கிய வெண் பல் எயிற்றியர்*
*பார்வை யாத்த பறை தாள் விளவின்,*
*நீழல் முன்றில், நில உரல் பெய்து,*
*குறுங் காழ் உலக்கை ஓச்சி, நெடுங் கிணற்று,*
*வல் ஊற்று உவரி தோண்டி, தொல்லை,*
*முரவு வாய்க் குழிசி முரி அடுப்பு ஏற்றி,*
*வாராது அட்ட வாடு ஊன் புழுக்கல். "*



## கதை – 6.

## காடை

ஒரு புஞ்சை.

அந்தப் புஞ்சையில் கம்பம் பயிர்கள் உயரமா வளர்ந்திருக்கு. அது கருது வாங்கிக்கிட்டிருக்கு. அந்தக் கருதுகள் அறுவடைக்குத் தயாரா இருக்கு.

இன்னக்கி அந்தப் புஞ்சையில் அறுவடை,

கருது பெறக்க, பெண்கள் வந்திருக்காக.

அந்தப் புஞ்சைக்கு வண்டி மாடுகளும் வந்திருக்கு.

அந்தப் புஞ்சையில் ஒரு முதுக்கஞ் செடி இருக்கு. அது, தரையோட தரையா படர்ந்து கெடக்கு.

அந்த முதுக்கஞ் செடியில் ஒரு காடை கூடு கெட்டிருக்கு. அந்தக் காடை ரெண்டு குஞ்சி பொரிச்சிருக்கு. அந்தக் குஞ்சிகள் ஒறங்கிக் கிட்டிருக்கு. அந்தத் தாய் காடை தன் குஞ்சுகளோடு படுத்திருக்கு.

அந்தத் தாய்க் காடை மனிதர்களின் பேச்சுச் சத்தத்தைக் கேட்கிறது..அது, வண்டி மாடுகளின் மணி ஓசையையும் கேட்கிறது.

அது, குஞ்சுகளை எழுப்புகிறது.

" என் செல்லங்களா.."

" எந்திரிங்க..எந்திரிங்க.."

" நமக்கு ஆபத்து வந்திருக்கு..."

" நாம் இங்கிருந்து போய்விட வேண்டும். "

" உங்களுக்குப் பறக்க முடியாது. "

" நாம் நடந்து போவோம்..."

" மெல்ல மெல்ல அம்ம கூட நடங்க.."

அந்தத் தாய்க் காடை, தன் குஞ்சுகளை அழைத்துக் கொண்டு, அந்தப் புஞ்சையை விட்டு, நடந்து போய்க் கொண்டிருக்கிறது.

கடியலூர் உருத்திரங்கண்ணனார்.
பெரும் பாணாற்றுப் படை.
பத்துப்பாட்டு



அடிகள் - 202 முதல் 205 வரை.

" அரி புகு பொழுதின், இரியல் போகி,
வண்ணக் கடம்பின் நறுமலர் அன்ன,
வளர் இளம் பிள்ளை தழீஇ, குறுங்கால்,
கறை அணல் குறும்பூழ், கட்சிச் சேக்கும்."

### கதை – 7.

### உலக்கைப் பாட்டு

ஒரு வயல்.

அந்த வயல்ல, வரப்பு அகலமா இருக்கு. அந்த வரப்புல ஒரு மரம் இருக்கு. அந்த மரத்துல ரெண்டு கிளிகள் உட்கார்ந்துக்கிட்டிருக்கு.

அந்த வரப்புல ஒரு குடிசையும் இருக்கு. அது அழகா இருக்கு. புதா வைக்கோல் போட்டு அந்தக் குடிசைய இப்பத்தான் வேய்ஞ்சிருக்காவ.

அந்தக் குடிசைக்கு முன்னால, ஒரு உரல் இருக்கு. அந்த உரல்ல, ரெண்டு பெண்கள் அவல் இடிக்கிறாவ. அவிய ரெண்டு பேரும் உலக்கைப் பாட்டுப் பாடிகிட்டே அவல் இடிக்கிறாவ.

அந்த உலக்கைச் சத்தமும்..அந்தப் பெண்களின் உலக்கைப் பாட்டுச் சத்தமும்…அந்த மரத்திலிருந்த கிளிகளைப் பயங்காட்டுது. அந்தக் கிளிகளுக்கு அந்த ரெண்டு சத்தமும், அதன் விரோதிகளின் சத்தம் மாதிரியே இருக்கு. விரோதிகள் தங்களைக் கொல்ல வருவதாக நெனைச்சிக்கிட்டு அந்தக் கிளிகள், பயந்துகிட்டு அங்கிருந்து



பறந்து போயிட்டுது.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்.<br>
பெரும் பாணாற்றுப் படை.<br>
பத்துப்பாட்டு<br>
அடிகள் -224 முதல் 227 வரை.

"..................வரம்பின்
புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்
அவல்எறி உலக்கைப்பாடு விறந்து அயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉம்.."



**கதை -8.**

## வளர்ப்புத் தாய்.

ஒரு பெரிய காரவீடு.

அந்த வீடு ரொம்ப்ப அழகாருக்கு. அந்த வீட்டுல ஒரு குழந்தை இருக்கு. அவன் இப்பத்தான் நடக்க ஆரம்பிச் சிருக்கான். அவன் ஒரு நடை வண்டியை உருட்டி உருட்டி நடந்து பழகிக்கிட்டிருக்கான். அவனுக்கு நடக்கணும்னு ரொம்ப ஆசை. அவன் அந்த நடை வண்டியை உருட்டிக் கிட்டு ரொம்ப நேரம் நடந்துகிட்டிருந்தான்.

அவனுக்கு களைப்பாயிட்டுது. அவனால் நடக்க முடியவில்லை. அவன் சோர்ந்து கீழே உட்கார்ந்திட்டான். அவன் வளர்ப்புத் தாய் அவனைத் தூக்கி அவள் நெஞ்சோடு அவனைப் படுக்க வைத்துக் கொள்கிறாள்.

அந்தத் தாய் ஒரு தூணில் சாய்ந்து உட்கார்ந் திருக்காள். அவள் குழந்தை அவளிடம் பால் குடிச்சிக் கிட்டிருக்கு. பால் குடிச்சிக்கிட்டிருக்கும் போதே அவனுக்கு உறக்கம் வருது. அவன் கண்கள் உறக்கத்திற்குச் சொக்குது.

அந்தத் தாய் அவனை ஒரு பட்டு மெத்தையில் படுக்க வைத்திருக்கிறாள். அவள் தன் குழந்தையை தட்டித் தட்டி

உறங்க வைத்துக் கொண்டிருக்கிறாள்.

*கடியலூர் உருத்திரங் கண்ணனார்.*
*பெரும் பாணாற்றுப்*
*படை. பத்துப்பாட்டு*
*அடிகள் - 249 முதல் 252 வரை.*



" *ஊரா நல் தேர் உருட்டிய புதல்வர்*
*தளர் நடை வருத்தம் வீட..அலர் முலைச்,*
*செவிலி அம் பெண்டிர்த் தழீஇ, பால் ஆர்ந்து,*
*அமளித் துஞ்சும் அழகுடை நல் இல்..*"

**கதை -9.**

## யாழி

ஒரு மலை.

அந்த மலையில் எப்பமும் மழை பெஞ்சிகிட்டே இருக்கு.

அந்த மலையில் ஒரு மூங்கில் காடு இருக்கு.

அந்தக் காட்டில் யானைகள் கூட்டமா போய்க் கிட்டிருக்கு. அந்த யானைக் கூட்டத்துக்கு, ஒரு தலைவர் இருக்கார். தலைவர் ஒரு பெரிய ஆண் யானை.

தலைவர் எல்லா யானைகளுக்கும் முன்னால போறார். மற்ற யானைகளெல்லாம் தலைவருக்குப் பின்னால போய்க்கிட்டிருக்கு.

ஒரு யாழி அந்த மூங்கில் காட்டில் அந்த யானை களுக்குத் தெரியாம ஒளிஞ்சிக்கிட்டிருக்கு.

அந்த யாழி அந்தத் தலைவர் யானையைவிட பெரிசு,

அந்த யாழி அந்த யானைக் கூட்டத்திற்குள் திடீர்னு புகுந்தது. அது, அந்தத் தலைவன் யானையைப் பிடித்தது. அந்தப் பெரிய யாழி, அந்த யானையைக் கொன்னுட்டுது. அது அந்த யானையை இழுத்துக்கிட்டுப் போகுது.

அந்த யானைக் கூட்டம் தலைவர் இல்லாமல்



திகைத்து நிற்கிறது. இனி என்ன செய்வது என்று தெரியாமல் அழுது கொண்டிருக்கிறது.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
பெரும் பாணாற்றுப் படை.
பத்துப்பாட்டு
அடிகள் - 257 முதல் 259 வரை.

" *மழை விளையாடும் கழைவளர் அடுக்கத்து*
*அணங்குடை யாழி தாக்கலில் பலவுடன்,*
*கணம்சால் வேழம் கதழ்வுற்றாங்கு..*"



## கதை -10
## ஒரு வாளை மீனின் கதை.

ஒரு குளம்.

அந்தக் குளத்தில் தண்ணீர் கெத்துக் கெத்துன்னு நெறையா கெடக்கு. அந்தக் குளத்தில் மீன்கள் தண்ணீருக்கு மேலே வந்து விளையாடிக் கொண்டிருக்கின்றன. அந்தக் குளத்தைச் சுற்றி நாணல்கள் உயரமாக வளர்ந்திருக்கிறது.

ஒரு வேடன் அந்தக் குளத்துக்கு வந்திருக்கிறான். ஒரு தோல் பை அவனிடம் இருக்கிறது. அந்தப் பையில் இறைச்சி இருக்கு.

அவனிடம் ஒரு தூண்டில் கம்பு இருக்கிறது. அது நீளமான கம்பு, அந்தக் கம்பின் முனையில் நீளமான ஒரு தூண்டில் கயிற்றைக் கெட்டியிருக்கிறான். அந்தக் கயிற்றின் முனையில் தூண்டில் முள் இருக்கிறது. வேடன், அந்தத் தூண்டில் முள்ளில் இறைச்சியைக் குத்திச் சொருவி வைத்திருக்கிறான். அவன், அந்தத் தூண்டிலைக் குளத்தில் எறிகிறான். அவன் அந்தத் தூண்டிலைக் குளத்தில் எறிந்து விட்டு அவன் அந்தத் தூண்டில் கம்பைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருக்கிறான்.

அந்தத் தூண்டில் கம்பின் நிழல் தண்ணீருக்கு மேல்

மிதந்து கொண்டிருக்கிறது. மிதப்புக் கட்டையும் அந்தத் தண்ணீரில் மிதந்து கொண்டிருக்கிறது.

ஒரு பெரிய வாளை மீன், அந்தத் தூண்டில் இரையைக் கடிக்கிறது.

தூண்டில் கயிறு அதிர்கிறது.

வேடன் உஷார் ஆகிறான்.

அவன் நினைக்கிறான்..

" ஒரு பெரிய மீன் தூண்டிலைக் கடித்திருக்கிறது. அது இன்னும் நல்லாக் கடித்து தூண்டிலை விழுங்கட்டும்.." அவன் காத்திருக்கிறான்.

அந்த வாளை மீன், தூண்டிலை விழுங்குகிறது. அதன் தொண்டையில் அந்தத் தூண்டில் முள் சிக்கிக்கிட்டுது.

அந்த வாளை மீன், ஆபத்தில் சிக்கிக் கொண்டோம் என்று புரிந்து கொள்கிறது.

அது தப்பிப்பதற்கான வழியை யோசிக்கிறது.

" கயிற்றை அறுப்பது.." என்று அது முடிவெடுக்கிறது.

அந்த வாளை மீன் தூண்டில் கயிற்றைக் கடிக்கிறது. அது கயிற்றைக் கடித்துக் கடித்து தூண்டில் கயிற்றை அறுத்து விட்டது.

அந்தப் பெரிய வாளை மீன் ஒரு ஆபத்திலிருந்து பிழைத்துக் கொண்டது.

அந்தக் குளத்தில் தண்ணீருக்கு மேல் நாணல் தட்டையின் நிழல் தெரியும் போதெல்லாம் அந்தப் பெரிய வாளை மீன் ஓடி ஒளிகிறது.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
பெரும் பாணாற்றுப் படை.
பத்துப்பாட்டு
அடிகள் - 283 முதல் 288 வரை.



" பச்சூன் பெய்த சுவல் பிணி பைந் தோல்,
கோள் வல், பாண்மகன் தலை வலித்து யாத்த,
நெடுங் கழைத் தூண்டில் நடுங்க நாண் கொளீஇ,
கொடு வாய் இரும்பின் மடி தலை புலம்ப,
பொதி இரை கதுவிய போழ் வாய் வாளை,
நீர் நணிப் பிரம்பின் நடுங்கு நிழல் வெரூஉம்.."

**கதை – 11.**

## சோத்து உருண்டை.

ஒரு பெரிய பூங்கா.

அந்தப் பூங்காவில் ஒரு பாகன் படுத்திருக்கிறான். அவனுக்கு முன்னால் ஒரு அண்டா இருக்கு. அது ரொம்பப் பெரிய அண்டா, அந்த அண்டாவில் சோத்து உருண்டைகள் இருக்கு.

அந்தப் பாகன் ஒரு பெரிய யானைக்குக் கவளம் கொடுப்பதற்காக சோத்தில் நெய் ஊற்றி மிதித்து, மிதித்து அந்த சோறு பூராவையும் உருண்டைப் பிடித்திருக்கிறான்.

அவன் களைத்துப் படுத்திருக்கிறான்.

அந்தப் பூங்காவில் ஒரு பெரிய காட்டு மரம் இருக்கு. அந்த மரத்தில் ஒரு குரங்கு இருக்கு. அது ஒரு பெண் குரங்கு, அது சினையா இருக்கு.

அந்தக் குரங்கு ரொம்ப நேரமா அந்தச் சோத்து உருண்டையைப் பார்த்துக் கொண்டிருந்தது. பாகன் படுத்ததும் " இதுதான் சோத்து உருண்டையை களவாங்க நல்ல நேரம்.." என்று அது மரத்திலிருந்து இறங்கி கீழே வருகிறது. அது பதுங்கிப் பதுங்கி வந்து ஒரு சோத்து



உருண்டையைத் தூக்கிக் கொண்டு அது ஓட்டமாய் ஓடுகிறது.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
பெரும் பாணாற்றுப் படை.
பத்துப்பாட்டு
அடிகள் - 393 முதல் 395 வரை.

" காழோர் இகழ் பதம் நோக்கி கீழ்.
நெடுங் கை யானை நெய்ம் மிதி கவளம்
கடுஞ்சூல் மந்தி கவரும் காவின்.."



**கதை -12.**

## நமக்கு அரண்மனை வேண்டாம்.

ஒரு பெரிய அரண்மனை.

அந்த அரண்மனையில் விலை உயர்ந்த ரத்தின மாலைகளும், தங்க நகைகளும், குமிஞ்சி கெடக்கு.

அந்த அரண்மனையில் ஒரு தொழுவம் இருக்கு. அந்தத் தொழுவத்தில் யானைகளைக் கெட்டிப் போட்டிருக்கிறார்கள். அது போர் யானைகள், அந்தப் போர் யானைகளின்தந்தங்களில் மாட்டியிருந்த பூண்கள் உடைந்திருக்கிறது. சில யானைகளின் தந்தங்களில் பூண் களையே காணோம்.

அந்தப் போர் யானைகளின் தந்தங்களில் புதிய இரும்புப் பூண்களை மாட்டுவதற்கு ஒரு கொல்லன் வந்திருக்கிறான். அவன் ஒரு பெரிய சம்மட்டியால், காய்ச்சிய இரும்பை ஓங்கி அடித்துக் கொண்டிருக்கிறான்.

அந்த அரண்மனையில் மாடியில் இரண்டு புறாக்கள் படுத்திருக்கிறது. கொல்லன் இரும்பை அடிக்கிற அந்தப் பயங்கர சத்தத்தில், அந்தப் புறாக்களால் அங்கே நிம்மதியாக படுத்திருக்க முடியவில்லை.

ஆண் புறா மனைவியிடம் சொல்கிறது..

" இந்த அரண்மனையில் நம்மால் நிம்மதியாக படுத்திருக்க முடியவில்லை. நமக்கு இந்த அரண்மனை வேண்டாம்....வா..நாம் வேறு இடத்துக்குப் போவோம்.."

அந்த ஆண் புறா தன் மனைவியை அழைத்துக் கொண்டு அரண்மனையை விட்டுப் போய் விட்டது.

*கடியலூரர் உருத்திரங் கண்ணனார்.*
*பெரும் பாணாற்றுப் படை.*
*பத்துப்பாட்டு*
*அடிகள் - 436 முதல் 440 வரை.*



" பெருங் கை யானைக் கொடுந்தொடி படுக்கும்
கருங் கைக் கொல்லன் இரும்பு விசைத்து எறிந்த,
கூடத்திண் இசை வெரீஇ, மாடத்து,
இறை உறை புறவின் செங்கால் சேவல்,
இன் துயில் இரியும் பொன் துஞ்சு வியல் நகர்.."

கதை -13.

## கலைஞர் வீடு.

இது ஒரு கலைஞர் வீடு.

இந்த வீடு இந்தத் தெருவிலிருந்து அடுத்த தெரு வரைக்கும் பெரிய வீடாக இருக்கிறது.

மண் சுவர்,

ஓலைக் கூரை,

இந்தப் பெரிய வீட்டில், பின்னால், இருந்த கூரையைக் கரையான்கள் தின்று விட்டன. மோட்டு வளைகளும், வரிச்சிக் கம்புகளும் கீழே விழுந்து கிடக்கிறது. மண் சுவர்கள் மழையில் கரைந்து கரைந்து கீழே விழுந்து கிடக்கிறது

இந்தக் கட்டிகளில் காளான்கள் முளைத்து அந்தக் காளான்களும் காய்ந்து கிடக்கிறது.

ஒரு நாய் இந்த இடிபாடுகளில் படுத்திருக்கிறது. அது ஒரு பெண் நாய், அது குட்டி போட்டிருக்கிறது. அந்தக் குட்டிகள் இன்னும் கண் முழிக்கவில்லை. அந்தக் குட்டிகள் தாயின் பால் காம்புகளைக் கடித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பால் காம்புகளில் பால் இல்லை. அந்தச் சின்னஞ் சிறு குட்டிகள் அழுது கொண்டே தாயின் பால் மடியை முட்டிக் கொண்டிருக்கிறது.



அந்த வீட்டின் தலைவாசல் கதவு, உள் பக்கம் பூட்டியிருக்கிறது.

அந்த வீட்டில் எல்லோரும் பசியோடு உட்கார்ந் திருக்கிறார்கள்.

அடுப்பில் கீரை வெந்து கொண்டிருக்கிறது.

அது குப்பைக் கீரை,

இந்தக் குப்பைக் கீரையைக் கலைஞரின் மனைவி பறித்துக் கொண்டு வந்திருக்கிறாள்.

வெந்த கீரையில் உப்பு போட, அந்த வீட்டில் உப்பு இல்லை.

அந்தத் தாய் அந்தக் கீரையை எல்லாருக்கும் பறிமாறுகிறாள்.

"நம்ம வறுமை ஊருக்குத் தெரிய வேண்டாம்" என்று அவர்கள் கதவைப் பூட்டிக் கொண்டு உப்பில்லாமல் வெந்த அந்தக் குப்பைக் கீரையைச் சாப்பிட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்.<br>
சிறு பாணாற்றுப் படை.<br>
பத்துப்பாட்டு<br>
அடிகள் 129 முதல் 139 வரை.

" இந்நாள்,
திறவாக் கண்ண சாய் செவிக் குருளை,
கறவாப் பால் முலை கவர்தல் நோனாது,
புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்,
காழ் சோர், முது சுவர்க் கணச் சிதல் அரித்த,
பூழி பூத்த புழல் காளாம்பி,
ஒல்கு பசி உழந்த ஒடுங்கு நுண் மருங்குல்,
வளைக் கை, கிணை மகள் வள் உகிர் குறைத்த,
குப்பை வேளை உப்பு இலி வெந்ததை,
மடவோர் காட்சி நாணி, கடை அடைத்து,
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும்.."



**கதை - 14.**

## கிச்சிலிப் பறவை.

ஒரு பெரிய்ய குளம்.

அந்தக் குளத்தில் தண்ணீர் வற்றியதே கிடையாது.

அந்தக் குளத்தின் கரையில் ஒரு மரம் இருக்கிறது.

அது ரொம்பக் குட்ட மரம். அதற்குப் பெயர் காஞ்சி மரம், அந்தக் காஞ்சி மரம், சரம் சரமாய் இலை தெரியாமல் பூத்திருக்கிறது.

அந்தக் குட்ட மரத்தில் தாழ்வான ஒரு கிளை, அதில் ஒரு கிச்சிலிப் பறவை உட்கார்ந்திருக்கு.

அது அந்தக் குளத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அது, அந்தக் குளத்தில் வைத்த கண்ணை எடுக்க வேயில்லை.

அந்தப் பறவை திடீரென்று அந்தக் குளத்தில் குதித்தது. அது தண்ணீரில் முங்கியது,

அந்தப் பறவை தண்ணீரிலிருந்து வெளியே வரும் போது ஒரு கயல் மீனை அது வாயில் வைத்திருந்தது.

இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்.
சிறு பாணாற்றுப் படை.
பத்துப்பாட்டு

*அடிகள் - 178 முதல் 181 வரை.*

*"நறும்பூங் கோதை தொடுத்த நாள்சினை*
*குறுங்கால் காஞ்சிக் கொம்பர் ஏறி,*
*நிலையருங் குட்டம் நோக்கி நெடிதிருந்து,*
*புலவுக் கயல் எடுத்த பொன்வாய் மணிச்சிரல்.."*



**கதை -15.**

## இடையர் குடியில் பிறந்த மகள்.

ஒரு சிறிய கிராமம்.

அந்தக் கிராமத்தில் ஒரு சிறிய வீடு, அந்தச் சிறிய வீட்டில் ஒரு மாட்டுத் தொழுவம் இருக்கிறது. ஒரு கன்றுக் குட்டியை ஒரு சிறிய கயிற்றில் அங்கே கட்டிப் போட்டிருக் கிறார்கள்.

அது, மழைக் காலம்,

இரவு பூராவும் மழை பெய்தது.

பொழுது விடிஞ்சதுக்குப் பிறகுதான் மழை வெறித்தது.

மழை வெறித்ததும், அந்தக் கன்றுக் குட்டியின் தாயை மேய்ச்சலுக்குக் கொண்டு போய்விட்டார்கள்.

பொழுது மேற்கே சாய்ந்து விட்டது,

நேரம் இருட்டிக் கொண்டு வருகிறது.

மேய்ச்சலுக்குப் போன அந்தத் தாய் பசு வீட்டிற்குத் திரும்பி வரவில்லை.

அந்தக் கன்றுக் குட்டி ஓயாமல் வாசலை எட்டிப் பார்க்கிறது. அது தூணைச் சுற்றிச் சுற்றி வருகிறது.

வாடைக் காற்று பலமாக வீசிக் கொண்டிருக்கிறது.

குளிர் தாங்க முடியவில்லை.

ஒரு சிறுமி அந்தத் தொழுவில் நின்று கொண்டிருக் கிறாள். அவள் உடம்பு குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கிறது. அவள் இரண்டு கைகளாலும் அவள் தோள்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு அந்தக் கன்றுக் குட்டியின் மேல் இரக்கம் ஏற்படுகிறது.

கன்றுக் குட்டிக்கு அவள் ஆறுதல் சொல்கிறாள்..

" கன்றுக் குட்டியே..."

" எங்க செல்லக் கன்றுக் குட்டியே.."

" உன் அம்மைய எங்க அய்யாதான் மேய்ச்சலுக்குக் கொண்டு போயிருக்கார்...எங்க அய்யா உன் அம்மைய பத்திரமாக் கூட்டிட்டு வருவார்.."

" உன் அம்மை..இப்ப வந்துருவா.."

" இப்ப வந்துருவா..உன் அம்ம. "

நப்பூதனார்.
முல்லைப் பாட்டு.
பத்துப்பாட்டு
அடிகள் -12 முதல் 16 வரை.



" சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்,
உறுகியர் அலமரல் நோக்கி ஆய்மகள்,
நடுங்குசுவல் அசைத்த கையள் கைய,
கொடுங்கோல் கோவலர் பின்னின்று உய்த்தர,
இன்னே பெருகுவர் தாயர் என்போள்.."

## கதை -16.

## ஒரு எருமை உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறது.

ஒரு கடல்கரைக் கிராமம்.

அந்தக் கிராமத்தில் ஒரு கம்மாய் இருக்கு. அந்தக் கம்மாய்க்கு அருகில், ஒரு பனங்காடு இருக்கு. அந்தப் பனங் காட்டில் எப்போதும் கள் கிடைக்கிறது.

இளைஞர்கள் கள் குடிச்சிட்டு, கரைமேல் நடந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்தக் கம்மாயில் ஒரு கிடங்கு. அதில் ஏகப்பட்ட சகதி. அந்தச் சகதியில் ஒரு எருமை மாடு மாட்டிக்கிட்டுது. அது உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறது.

இந்த இளைஞர்கள் அந்த எருமையைக் காப்பாற்ற ஓடுகிறார்கள். அவர்கள் அந்தச் சகதியில் குதிக்கிறார்கள். அந்த எருமையை வெளியே கொண்டு வருகிறார்கள். போராடிக் கொண்டிருந்த எருமையைக் காப்பாற்றியதில் அவர்களுக்கு அவ்வளவு சந்தோசம் அவர்கள்விசிலடித்து ஆரவாரம் செய்கிறார்கள். அவர்களின் மகிழ்ச்சியான



ஆரவாரம் அந்தக் கம்மாயில் ரொம்ப நேரமா கேட்டுக் கொண்டிருந்தது.

*மாங்குடி மருதனார்.*
*மதுரைக் காஞ்சி.*
*பத்துப்பாட்டு*
*அடிகள் -259 முதல் 260 வரை.*

" அள்ளல் தங்கிய பகடுஉறு விழுமம்,
கள்ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே.."



**கதை -17.**

## யானைகள் வேறு நிலம் தேடி போகின்றன.

ஒரு காடு.

அந்தக் காட்டில் மூங்கில் மரங்கள் ஏராளமாக இருந்தது. அந்தக் காட்டில் யானைகளும் ஏராளமாக இருந்தது. அந்த யானைகள். மூங்கில் மரங்களை வளைத்து ஒடிக்கும், அந்த மூங்கில் மரத்திலிருந்து குருத்துக்களை மட்டும் அந்த யானைகள் தின்னும். மூங்கில் மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்த அந்தக் காட்டில், யானைகள் பசி அறியாமல் வாழ்ந்தது.

ஒரு நாள் அந்த மூங்கில் காடு " தீ "பிடித்து எரிந்தது. அந்தக் காட்டில் செழித்து வளர்ந்திருந்த மூங்கில் மரங்களெல்லாம் எரிந்து சாம்பலாகி விட்டது.

அந்தக் காட்டில் யானைகளுக்கு இப்போது உணவில்லை. அந்த யானைகள் அங்கிருந்து வெளியேறி இன்னொரு செழிப்பான காட்டைத் தேடிப் போய்க் கொண்டிருக்கின்றன.

மாங்குடி மருதனார்.
மதுரைக் காஞ்சி.
பத்துப்பாட்டு
அடிகள் - 302 முதல் 303 வரை.

" இருவெதிர்ப் பைந்தூறு கூர்எரி நைப்ப,
நிழத்த யானை மேய்புலம் படர.."



## கதை -18.

## அடங்க மறுக்கிறது ஒரு யானை.

ஒரு பெரிய ஆண் யானை.

அந்த யானையை இரும்புச் சங்கிலியால் கெட்டி வைத்திருக்கிறார்கள். வைரம் பாய்ந்த, ஒரு மரத்தூணில்.

அந்த யானைக்கு இந்த வாழ்க்கை பிடிக்கவில்லை. கோவம் வருகிறது. அது தன் பலத்தை ஒன்றுதிரட்டுகிறது.

அது, தன்னைக் கெட்டி வைத்திருக்கிற மரத்தூணை, ஒடித்துக் கீழே சாய்க்கிறது. தனக்குப் பயிற்சி கொடுத்த வாத்தியாரை அது பிடிக்கிறது. அவனை தன் காலுக்குக் கீழே போட்டு மிதித்துக் கொல்கிறது. அது தன்மேலே ஏறி உட்கார்ந்து கொண்டு தன்னை வேலை வாங்குகிற பாகனைப் பிடிக்கிறது. அவனை தன் தும்பிக்கையால் நசுக்கிக் கொன்று தூர எறிகிறது.

அந்த யானைக்குக் கோவம் இன்னும் அடங்க வில்லை. அந்தப் பெரிய ஆண் யானை அந்தப் பெரிய நகரத்தில் முக்கியமான ஒரு முச்சந்தியில் வந்து நின்று கொண்டிருக்கிறது. அது நான்கு திசைகளிலும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது.

அந்த யானைக்கு முன்னாலேயும், பின்னாலேயும்

சங்கு ஊதுகிறவர்கள் நின்று கொண்டு சங்கு ஊதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிற மக்களைப் பார்த்துச் சொல்கிறார்கள்...

"யானைக்கு மதம் பிடித்திருக்கிறது..ஓடி விடுங்கள்..."

*மாங்குடி மருதனார்.*
*மதுரைக் காஞ்சி.*
*பத்துப்பாட்டு*
*அடிகள் - 380 முதல் 383 வரை.*



" இருதலைப் பணிலம் ஆர்ப்பச் சினம் சிறந்து,
கோலோர் கொன்று மேலோர் வீசி,
மென்பிணி வன்றொடர் பேணாது காழ்சாய்த்து,
கந்துநீத்து உழிதரும் கடா யானையும்.."

**கதை – 19.**

## தலைச்சுமை வியாபாரிகள்.

மதுரை.

இது பாண்டிய மன்னனின் தலைநகரம்.

இந்தத் தலைநகரில், ஒரு பெரிய கடை வீதி இருக்கிறது. பாண்டிய மன்னனின் அரண்மனையில் இருந்து, அது, ஆரம்பிக்கிறது. இந்தக் கடை வீதியில், தலைச்சுமை வியாபாரிகள். அவர்களுடைய பண்டங்களை, விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு வியாபாரி, ஒரு பெரிய பூக்கூடை வைத்திருக் கிறான். அந்தப் பெரிய கூடை நெறைய்யா, மல்லிகைப் பூக்கள் இருக்கிறது. அந்த மல்லிகைப் பூக்களின் மணம், அந்தப் பெரிய கடை வீதியெங்கும் மணந்து கொண்டிருக் கிறது.

இன்னொரு பூ வியாபாரி, இரண்டு பூக்கூடைகள் வைத்திருக்கிறான். இரண்டும் பெரிய பெரிய கூடைகள், அவன் அந்தக் கூடையில், பூமாலைகள் வைத்திருக்கிறான். அந்தப் பூமாலைகள், பல நிறப் பூக்களால், அழகாகக் கெட்டப்பட்டிருக்கிறது.

ஒரு வியாபாரி, வெற்றிலை விற்றுக் கொண்டிருக் கிறான். அவனிடம் இருப்பது எல்லாமே, கொளுந்து வெற்றிலைகள். அவன், அந்த வெற்றிலைகளைக் காம்போடு காம்பு சேர்த்து கவுளி கவுளியாய், அழகாக அடுக்கி வைத்திருக்கிறான்.



ஒரு வியாபாரி, பாக்கு விற்றுக் கொண்டிருக்கிறான். அது இப்பொழுதான் பறித்துக் கொண்டு வந்த பச்சப் பாக்கு கள். அவன், அதை, ஒரு தட்டில் வைத்திருக்கிறான். அவன் அந்தத் தட்டை, நெஞ்சு நேருக்குத் தொங்க விட்டிருக் கிறான்.

ஒரு வியாபாரி. சுண்ணாம்பு விற்றுக் கொண்டிருக் கிறான். அது, கிராமத்தில் காளவாசலில் நீற்றிய சுண்ணாம்பு. அது, வெள்ளை வெளேர் என்று, வெண்ணை மாதிரி இருக்கிறது.

ஒரு வியாபாரி. வாசனைப் பொடி விற்றுக் கொண் டிருக்கிறான். அது விலை உயர்ந்த வாசனைப் பொருள்களை, அவன் வீட்டில் பெண்கள், கல் உரலில் இடித்துச் சலித்தது.

இன்னும் இன்னும், ஏராளமான தலைச்சுமை வியா பாரிகள், அவர்கள் பொருள்களை, தலையில் சுமந்து கொண்டு, நடையாய், நடந்து நடந்து, விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

பாண்டிய மன்னனின் படைகள். அந்தப் பெரிய கடைவீதியில், வீர நடை போட்டு வருகிறது. மொதலாவது யானைப் படை வருகிறது. போர் யானைகளின் வருகை யால், அந்தப் பெரிய கடைவீதி அதிர்கிறது. தலைச்சுமை வியாபாரிகள், உயிருக்குப் பயந்து கொண்டு ஓடுகிறார்கள்.

அந்தப் பெரிய கடைவீதியில் இரண்டு பக்கங்

களிலும், உயரமான பெரிய பெரிய மாளிகைகள் இருக்கிறது. அந்தத் தலைச்சுமை வியாபாரிகள், அந்தப் பெரிய மாளிகைகளின் நிழலில் தஞ்சம் அடைகிறார்கள்.

" இந்தப் படைகள், இந்தக் கடை வீதியைக் கடந்து எப்போது போகும்..? நாம், நம் பண்டங்களை, எப்போது விற்பது..? " என்று, அவர்கள் கவலையோடு அங்கே உட்கார்ந்திருக்கிறார்கள்.

மாங்குடி மருதனார்.
மதுரைக் காஞ்சி.
பத்துப்பாட்டு
அடிகள் - 395 முதல் 406 வரை.



" தீம்புழல் வல்சிக் கழற்சால் மழவர்
பூந்தலை முழவின் நோன்றலை கடுப்ப
பிடகைப் பெய்த கழல்நறும் பூவின்
பலவகை விரித்த வெதிர்பூங் கோதையர்
பலர் தொகுபு இடித்த தாதுகு சுண்ணத்தர்
தகைசெய் தீஞ்சோற்று இன்னீர்ப் பசுங்காய்
இருதலை வந்த பகைமுனை கடுப்ப
இன்உயிர் அஞ்சி இன்னா வெய்துயிர்த்து
ஏங்குவளர் இருந்து அவை நீங்கிய பின்றை
பல்வேறு பண்ணியம் தழீஇந்திரி விலைஞர்
மலைபுரை மாடத்துக் கொழுநிழல் இருந்தர.."

கதை - 20.

## காமப் பூக்களும் போகப் பலகாரங்களும்.

இது, மதுரை,

இது, ரொம்பப் பெரிய நகரம்.

இது, பாண்டிய மன்னனின் தலைநகரம்,

இந்தப், பெரிய நகரத்தில், ஒரு பணக்காரத் தெரு,

இந்தப் பணக்காரத் தெருவில், ஒரு பெரிய மாளிகைக்கு முன்னால் ஒரு பாட்டி நின்னுக்கிட்டிருக்காவ, அவுகளுக்கு நீளமான நரைத்த முடி. தலைவாரி சிக்கெடுத்து முடியைக் கொண்டை போட்டிருக்காவ. அந்தப் பாட்டியின் கொண்டை வலம்புரிச் சங்கு மாதிரி அழகாக இருக்கிறது.

அவுக, ஒரு வியாபாரி, அவுக, குறிப்பிட்ட பொருள்களை மட்டும், விற்பனை செய்கிறார்கள். அதை சில வீடுகளுக்கு மட்டும்தான், கொண்டு போகிறார்கள். அந்தப் பாட்டி புதிதாக திருமணம் ஆன, புதுமணத் தம்பதிகள் வீடுகளுக்கு மட்டும்தான் போகிறார்கள்.

பாட்டி வெளியே நின்று கொண்டிருக்கிற அந்தப் பெரிய மாளிகையில் ஒரு பெண் இருக்கிறாள். அவள் திருமணம் ஆன இளம்பெண், அவள் ஒரு பேரழகி. அந்தப் பெண், அவளுடைய மார்புகளில் ஓவியம் வரைந்திருக் கிறாள். இயற்கையும் அவளுடைய இளம் மார்புகளில் தேமல்களை வரைந்து வைத்திருக்கிறது. அவளுக்கு கரு கருனு கருத்த முடி. அது நீளமா இருக்கு. அந்த முடி அவளுக்கு மேலும் அழகு செய்கிறது. அவள், தங்கச் சிலை மாதிரி ஒளி வீசிக் கொண்டிருக்கிறாள்.



அவளுக்கு இப்போதுதான் திருமணம் ஆகி இருக்கிறது. கணவன் ஒரு பெரிய பணக்கார வீட்டுப் பையன், அவன் அழகான இளைஞன், அவன் படிக்கல. அந்தப் பெண் தன் மாய அழகால் தன் கணவனைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறாள்.

அவள் தன் கணவனின் கையைப் பிடித்துக் கொண்டு பாட்டி முன்னால் வந்து நிற்கிறாள்.

பாட்டி அவளிடம் மணம் நிறைந்த காமப் பூக்களை யும், ருசி மிகுந்த போகப் பலகாரங்களையும் கொடுக்கிறாள்.

மாங்குடி மருதனார்.
மதுரைக் காஞ்சி.
பத்துப்பாட்டு
அடிகள் - 407 முதல் 423 வரை.

" இருங் கடல் வான் கோடு புரைய வாருற்றுப்
பெரும் பின்னிட்ட வால் நரைக் கூந்தலர்,
நன்னர் நலத்தர், தொல் முது பெண்டிர்,
செந்நீர்ப் பசும் பொன் புனைந்த பாவை,
செல் சுடர்ப் பசு வெயில் தோன்றியன்ன,
செய்யர், செயிர்த்த நோக்கினர், மடக் கண்,
ஐஇய கலுழும் மாமையர், வை எயிற்று,
வார்த்த, வாயர், வணங்கு இறைப் பணைத் தோள்,
சோர்ந்து உகுவன்ன வயக்குறு வந்திகை,
தொய்யில் பொறித்த சுணங்கு எதிர் இள முலை,
மை உக்கன்ன மொய் இருங் கூந்தல்,
மயில் இயலோரும், மட மொழியோரும்,
கைஇ மெல்லிதின் ஒதுங்கி, கை எறிந்து,
கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்ப,
புடை அமை பொலிந்த வகை அமை செப்பில்
காமர் உருவின் தாம் வேண்டு பண்ணியம்,
கமழ் நறும் பூவொடு மனைமனை மறுக.."



## கதை -21.

## அரண்மனைக்காரன் தெரு.

ஒரு பருந்து.

அது வடக்கே ரொம்பத் தொலைவில் இருந்து மதுரைக்கு வந்திருக்கிறது. அது, அந்தப் பெரிய நகரத்திற்கு மேலேயே வட்டமடித்து..வட்டமடித்து அது தங்குவதற்கு ஒரு இடத்தைக் கண்டுபிடித்திருந்தது.

அது, ஒரு பெரிய மாளிகை. நுட்பமான சிற்ப வேலை களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறது. அந்த மாளிகைக்குச் சொந்தக்காரர் ஒரு இறக்குமதியாளர். அவர் தரமான, விலை உயர்ந்த பொருள்களை மட்டும் தான் இறக்குமதி செய் கிறார். அவர் அந்தப் பொருள்களை, மாணிக்கக் கற்களுக்கும், முத்துக்கும், தங்கத்துக்கும் மட்டும்தான் பண்டமாற்று செய்கிறார்.

இந்த இறக்குமதியாளரின் அந்தப் பெரிய மாளிகை அரண்மனைக்காரன் தெருவில் இருக்கிறது. இந்தத் தெருவில் முதல் தரமான எல்லாப் பொருள்களும் கிடைக் கிறது. இங்கே உயர்தரமான, நல்ல உணவு, எப்போதும் கிடைக்கிறது. பெருங்கொண்ட வியாபாரிகள் மட்டும் வசிக்கிற, இந்தத் தெரு மக்களுக்கு பாண்டிய மன்னன் பல

அடுக்குப் பாதுகாப்புக் கொடுத்து, அவர்களைப் பாது காக்கிறான்.

அந்தப் பருந்து இந்த அரண்மனைக்காரன் தெருவில் அந்தப் பெரிய மாளிகையில் உட்கார்ந்து இளைப்பாறிக் கொண்டிருக்கிறது.

மாங்குடி மருதனார்.
மதுரைக் காஞ்சி.
பத்துப்பாட்டு
அடிகள் -501 முதல் 506 வரை.



" குறும் பல் குழுவின் குன்று கண்டன்ன,
பருந்து இருந்து உகக்கும் பல் மாண் நல் இல்,
பல் வேறு பண்டமோடு ஊண் மலிந்து கவினி,
மலையவும், நிலத்தவும், நீரவும், பிறவும்,
பல் வேறு திருமணி, முத்தமொடு, பொன் கொண்டு,
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்தரும்.."

## கதை -22.

## பூ

ஒரு பூஞ்சோலை. அந்தப் பூஞ்சோலையில், ஒரு பெரிய காட்டு மரம் இருக்கிறது. அது பூத்திருக்கிறது.

ஒரு வண்டு. அது, ரொம்பச் சிறிய வண்டு. அந்த வண்டுக்கு மெல்லிய சிறகுகள், அது அந்தப் பூஞ்சோலைக்கு வந்திருக்கிறது. அது, அந்தப் பெரிய காட்டு மரத்தில் உட்காருகிறது. அது ஒரு பூவிற்குள் நுழைகிறது. அந்த வண்டு அந்தப் பூவில் இருக்கிற தாதுக்களை தின்று கொண்டிருக்கிறது.

அந்தப் பூவுக்கும், அந்த வண்டுக் கும் இதுதான் முதல் உறவு, வண்டு தாதுக்களைத் தின்றதும் பறந்து போய்விடும்.

பூ வாடி உதிரும்.

மாங்குடி மருதனார்.
மதுரைக் காஞ்சி.
பத்துப்பாட்டு
அடிகள் 573 முதல் 574 வரை.



" நுண் தாது உண்டு, வறும் பூ துறக்கும்,
மென் சிறை வண்டினம் மான, புணர்ந்தோர்.."

## கதை -23.

## நாட்டியப் பேரொளி.

ஒரு பெரிய வீடு.

அந்த வீட்டில் திருமணம் நடந்து கொண்டிருக்கிறது. அந்தத் திருமண வீட்டில் ஒரு நாட்டிய நாடகமும் நடந்து கொண்டிருக்கிறது.

நாட்டிய மேடையில் இசைக் கருவிகள் முழங்கு கின்றன. பாடகர்கள், மெல்லிசையில் காம ரசம் சொட்டச் சொட்டப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு இளம் பெண் நளினமான தன் நடன அசைவுகள் மூலம் அந்தக் காதல் பாட்டிற்கு நடனம் ஆடிக் கொண்டிருக் கிறாள்.

அவள் பேரழகி,

அவள் ஒரு நாட்டியப் பேரொளி,

அவள் கண்ணைப் பறிக்கிற விலை உயர்ந்த நாட்டிய உடைகளை உடுத்தி இருக்கிறாள். அவள் வேலைப்பாடுகள் நிறைந்த ஏராளமான ஆபரணங்களையும் அணிந்திருக் கிறாள். அவள் மேல் வண்ண மயமான விளக்கு வெளிச்சம் கொட்டோ கொட்டென்று கொட்டிக் கொண்டிருக்கிறது. பருவ எழில் பூத்துக் குலுங்குகிற அந்த நாட்டியப் பேரொளியின் அழகு அங்கு வந்திருக்கிற வாலிபர்களை கிறங்க அடிக்கிறது. அவள் உடல் அசைவுகள் அந்த வாலிபர்களின் நெஞ்சில் காமத் தீயை வளர்க்கிறது. அந்த



வாலிபர்கள், நேரம் ஆக ஆக, முன்னே முன்னே நகர்ந்து நகர்ந்து அந்த நாட்டிய மேடையை நெருங்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

மேடையில் இனிமையாக இசைத்துக் கொண்டிருந்த இசைக் கருவிகள் ஓய்வெடுக்கின்றன.

திரைச் சீலை கீழே இறங்குகிறது.

வாலிபர்கள் முண்டியடித்துக் கொண்டு நடன அரங்கை நோக்கி ஓடுகிறார்கள்.

துடிப்பான ஒரு வாலிபன் அவளைக் கட்டிப் பிடித்துத் தூக்குகிறான்.

இது... நாட்டியப் பேரொளியின் மாளிகை, இந்தப் பெரிய மாளிகையில் அந்த நாட்டியப் பேரொளி அந்தப் பணக்கார வாலிபனைக் கட்டித் தழுவிக் கொண்டிருக் கிறாள். அந்த வாலிபன் மார்பில் ஒரு தங்கச் சங்கிலி புரண்டு கொண்டிருக்கிறது. அந்தச் சங்கிலியில் கனமான ஒரு டாலர் இணைக்கப்பட்டிருக்கிறது. அவள் அந்த டாலரை அவளுடைய மார்பில் பதித்து வைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் தன் மார்பில் அந்த டாலர் தழும்பை ஏற்படுத்தும்படி வாலிபனை இறுக்கி அணைக்கிறாள்.

அந்த வாலிபனின் விலை உயர்ந்த நகைகள் அந்தப் பேரழகியின் அழகை மேலும் அழகுபடுத்திக் கொண்டிருக் கிறது.

மாங்குடி மருதனார்.
மதுரைக் காஞ்சி.
பத்துப் பாட்டு
அடிகள் - 569 முதல் 583 வரை.

" நுண் பூண் ஆகம் வடுக் கொள முயங்கி,
மாயப் பொய் பல கூட்டி, கவவுக் கரந்து,
...... ..... ..... ...... ..... ..... ...... ....... ....... ......
கொழுங் குடிச் செல்வரும் பிறரும் மேஎய,
மணம் புணர்ந்து ஓங்கிய, அணங்குடை நல் இல்,
ஆய் பொன் அவிர் தொடிப் பாசிழை மகளிர்
ஒண் சுடர் விளக்கத்துப், பலர் உடன் துவன்றி,
நீல் நிற விசும்பில் அமர்ந்தனர் ஆடும்,
வானவ மகளிர் மான, கண்டோர்,
நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்.."



## கதை - 24.

## ஓணம் திருநாள்.

இன்று ஓணம் திருநாள்.

பெருமாள் பிறந்த திருநாளை, மக்கள் ஓணம் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள். இந்த ஓணம் திருநாளில், ஒரு முக்கிய நிகழ்ச்சியாக யானைச் சண்டையை நடத்துகிறார்கள்.

இரண்டு கிராமங்கள்.

இந்த இரண்டு கிராமங்களும் பக்கத்துப் பக்கத்துக் கிராமங்கள், இந்தக் கிராமங்களுக்கு மேற்கே, கரிசல் நிலம், விரிந்து கிடக்கிறது. இங்கே யானைச் சண்டை நடத்துவதற்கு நிலத்தைச் சுத்தப்படுத்தி இருக்கிறார்கள். அங்கே ஒரு சுவர் எழுப்பி இருக்கிறார்கள். அது, நீளமான சுவர், நல்ல அகலம், அதனடியில் கூர்மையான கற்களைக் கொட்டி வைத்திருக்கிறார்கள்.

இந்தப் போர்க்களத்துக்கு இரண்டு கிராமங்களில் இருந்தும் போர் யானைகள் வந்திருக்கிறது. அந்தப் போர் யானைகள், முகத்தில் போரில் ஏற்பட்ட விழுப்புண்களின் தழும்புகள் இருக்கிறது. அதன் தும்பிக்கையிலும் போரில் ஏற்பட்ட வடுக்கள் இருக்கிறது.

இந்தப் போர்க்களத்துக்கு யானைகளைக் கொண்டு வந்த வீரர்கள் மாலை அணிந்திருக்கிறார்கள். அந்தப் பூமாலைகளை வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கிறது.

போர் யானைகளைச் சண்டை போடும்படி அந்த வீரர்கள் உத்திரவு கொடுக்கிறார்கள்.

போர் யானைகள் ஆவேசத்தோடு மோதுகின்றன. அவைகள் எதிரியின் முகத்தைக் குத்திக் கிழிக்கிறது.

பார்வையாளர்கள் சுவர்மேல் ஏறி பாதுகாப்பாக நின்று கொண்டு யானைகள் சண்டை போடுவதைப் பார்த்துக் கொண்ருக்கிறார்கள்.

பார்வையாளர்கள் பக்கம் போர் யானைகள் வந்து விடாதபடி பாதுகாப்பு வீரர்கள் காவல் காத்துக் கொண் டிருக்கிறார்கள். அந்தப் பாதுகாப்பு வீரர்கள் கள் குடித் திருக்கிறார்கள்.

போர் யானைகள் எதிரிகளைக் கொடூரமாத் தாக்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் போர்க்களம் ரத்தத்தில் நனைந்து கொண்டிருக்கிறது.

மாங்குடி மருதனார்.
மதுரைக் காஞ்சி.
பத்துப்பாட்டு
அடிகள் - 591 முதல் 599 வரை.



" மாயோன் மேய ஓண நல் நாள்,
கோணம் தின்ற வடு ஆழ் முகத்த,
சாணம் தின்ற சமம் தாங்கு தடக்கை,
மறம் கொள் சேரி மாறு பொரு செருவில்,
மாறாது உற்ற வடுப் படு நெற்றி,
சுரும்பு ஆர் கண்ணிப் பெரும் புகல் மறவர்,
கடுங் களிறு ஓட்டலின், காணுநர் இட்ட,
நெடுங் கரைக் காழகம் நிலம் பரல் உறுப்ப,
கடுங் கள் தேறல் மகிழ் சிறந்து திரிதர.."

### கதை - 25.
## குழந்தை பிறந்த வீடு.

ஒரு சிறிய கிராமம்,

அந்தக் கிராமத்தில் ஒரு பெரிய காரை வீடு இருக்கு. அது ரொம்பச் செல்வச் செழிப்பான வீடு.

அந்த வீட்டில் ஒரு பெண்ணுக்கு ஒரு குழந்தை பிறந் திருக்கிறது. அவளுக்கு அது முதல் பிரசவம்.

அவள் ஊர் குளத்தில் குளித்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்குத் துணையாக அவள் மதினிமார்களும், அவள் தங்கச்சிமார்களும் அவளோடு குளித்துக் கொண்டிருக்கிறார்கள். அவள் நீந்தி நீந்தி, ஆனந்தமாகக் குளித்துக் கொண்டிருக்கிறாள். அவள் குளிக்கக் குளிக்க அவள் உடம்பிலிருந்து குழந்தை பெற்ற மணம் நீங்குவதால் அவள் மகிழ்ச்சி அடைகிறாள்.

அந்த இளம் பெண்ணின் இளம் மார்புகளில் பால் ஊறி ஊறி அவள் மார்புகள் கனப்பதைப் பார்த்துப் பார்த்து அவள் மகிழ்ச்சி அடைகிறாள்.

அவள் கணவன் மகிழ்ச்சி அடையும்படி அவள் கணவனுக்கு அவள் குழந்தை பெற்றுக் கொடுத்ததில் அவள்



பேரானந்தம் அடைகிறாள். அவள் அந்தக் குளத்தில் நீண்ட நேரம் குளித்துக் கொண்டிருந்தாள்.

மாங்குடி மருதனார்.<br>
மதுரைக் காஞ்சி.<br>
பத்துப்பாட்டு<br>
அடிகள் - 600 முதல் 603 வரை.

" கணவர் உவப்பப் புதல்வர்ப் பயந்து,
பணைத்து ஏந்து இளமுலை அமுதம் ஊற,
புலவுப் புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு,
வளமனை மகளிர் குளநீர் அயர.."



## கதை -26.

## அவர்கள் கோயிலுக்குப் போகிறார்கள்.

ஒரு சிறிய கிராமம்.

அந்தக் கிராமத்தில் ஒரு பெரிய காரை வீடு, அந்த வீட்டில் ஒரு இளம்பெண் நிறை சூலியாக இருக்கிறாள்.

"அவளுக்கு நல்ல சுகத்தோடு குழந்தை பிறக்கணும்" என்று அந்தக் குடும்பத்தார் சாமியை வேண்டிக் கொண்டு அவர்கள் சாமி கும்பிட கோயிலுக்குப் போய்க் கொண்டிருக் கிறார்கள். ஒரு வாலிபன் ஒரு பெரிய விளக்கைப் பிடித்துக் கொண்டு அவன் எல்லாருக்கும் முன்னால் போய்க் கொண் டிருக்கிறான். அந்தப் பெரிய விளக்கு நெய்யில் பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கிறது.

யாழ், இசைக்கிற கலைஞர்களும், மேளம் அடிக்கிற கலைஞர்களும் அழகாக வாசித்துக் கொண்டு போகிறார்கள்.

அந்தக் குடும்பத்தார் பொங்கலை வீட்டிலேயே வைத்து,அந்தப் பொங்கலைக் கோயிலுக்குக் கொண்டு போகிறார்கள். அவர்கள் பூசைப் பொருள்களையும், வீட்டிலிருந்தே கொண்டு போகிறார்கள்.

அவர்களோடு ஒரு பூசாரிப் பெண்ணும் போகிறாள். அவளுக்கு நடு வயது, அவள் சாமியும் ஆடுவாள்.

அந்த நிறை சூலிப்பெண் நடக்க முடியாமல் நின்று நின்று அசைந்து அசைந்து நடக்கிறாள். அவள் குடும்பத்தார் அவள் கூட மெல்ல நடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

மாங்குடி மருதனார்.
மதுரைக் காஞ்சி.
பத்துப்பாட்டு
அடிகள் - 604 முதல் 610 வரை.



" திவவு மெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணி,
குரல் புணர் நல் யாழ் முழவொடு ஒன்றி,
நுண் நீர் ஆகுளி இரட்ட, பலவுடன்,
ஒண் சுடர் விளக்கம் முந்துற, மடையொடு,
நல் மா மயிலின் மென்மெல இயலி,
கடுஞ்சூல் மகளிர் பேணி, கை தொழுது,
பெருந் தோள் சாலினி மடுப்ப.."

**கதை - 27.**

## கொள்ளைக் காரன்.

ஒரு பெரிய தெரு.

அந்தப் பெரிய தெரு, பாண்டிய மன்னன் அரசாளும் மதுரையில் இருக்கிறது. அந்தப் பெரிய தெரு இருட்டில் மூழ்கிக் கிடக்கிறது.

அந்தத் தெருவில் ஒரு ஆள் பதுங்கி பதுங்கி வந்து கொண்டிருக்கிறான். அவன் நீல நிறத்தில் உடை அணிந்திருக் கிறான். அவன், இருட்டில் வருவது தெரியவேயில்லை அவன் தோல் செருப்பு அணிந்திருக்கிறான். அவன் நடக்கும் போது அந்த செருப்பில் இருந்து சத்தம் வர வேயில்லை. அவனிடம் ஒரு நூல் ஏணி இருக்கிறது. அந்த மெல்லிய நூல் ஏணியை அவன் இடுப்பில் சுற்றி ஒளித்து வைத்திருக்கிறான். அவனிடம் கூர்மையான ஒரு குத்துவாள் இருக்கிறது. அவன் அந்தக் குத்துவாளை அவன் காலோடு சேர்த்துக் கெட்டி மறைத்து வைத்திருக்கிறான். அவனிடம் கல்லை அறுக்கவும், மரத்தை அறுக்கவும், மண்ணைத் தோண்டவும் கருவிகள் இருக்கிறது. அவன் அந்தப் பெரிய தெருவில், ஒரு பெரிய வீட்டில் கன்னக்கோல் வைத்து கொள்ளையடிக்க பதுங்கிப் பதுங்கி வந்து கொண்டிருக்கிறான்.



அந்தப் பெரிய தெருவில் பாண்டிய மன்னனின் ஒரு பெரிய காவல் அதிகாரி இரவுப் பாரா வந்து கொண்டிருக் கிறார்.

அந்தக் கொள்ளைக்காரன், அந்தக் காவல் அதிகாரியைப் பார்த்ததுதான் தாமதம், அவன் ஓட்டமாய் ஓடி கண்ணை மூடி முழிப்பதற்குள் தப்பி விட்டான்.

மாங்குடி மருதனார்,
மதுரைக் காஞ்சி.
பத்துப்பாட்டு
அடிகள் - 634 முதல் 642 வரை

" இரும் பிடி மேஎந் தோல் அன்ன இருள் சேர்பு,
கல்லும் மரனும் துணிக்கும் கூர்மைத்,
தொடலை வாளர்,தொடுதோல் அடியர்,
குறங்கிடைப் பதித்த கூர் நுணைக் குறும்பிடி,
சிறந்த கருமை நுண் வினை நுணங்கு அறல்,
நிறம் கவர்பு புனைந்த நீலக் கச்சினர்,
மெல் நூல் ஏணிப் பல் மாண் சுற்றினர்,
நிலன் அகழ் உளியர், கலன் நசைஇக் கொட்கும்,
கண் மாறு ஆடவர் ஒடுக்கம் ஒற்றி.."



**கதை - 28.**

## ஊர் காப்பாளர்.

பாண்டிய மன்னன் அரசாளும் மதுரை. அந்த மதுரையில், ஒரு பெரிய தெரு, அது தேர் ஓடும் திருவீதி, அந்தப் பெரிய தெருவில். மழைத்தண்ணீர், பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது. மழை. விடாமல், பெய்து, கொண்டிருக்கிறது. மழை மேகங்கள், மதுரையின் நான்கு திசைகளிலும் அடைத்துக் கொண்டிருக்கிறது.

சரியான இருட்டு.

நடுச்சாமம்.

பாண்டிய மன்னனின் ஊர் காவலர். அந்தப் பெரிய மழையில் நனைந்து கொண்டு, காவல் வலம் வந்து கொண்டிருக்கிறார். இந்தக் காவல் அதிகாரி...

பயம் அறியாதவர்.

பெலசாலி.

ஊக்கம் உள்ளவர்.

களவு நூல்களை ஆழமாகப் படித்த

சான்றோர்கள் புகழும் ஆண்மையாளர்.

காவல் துறையில் நுண் அறிவு பெற்ற வல்லுநர்.

உயர் கல்வி கற்ற உயர் அதிகாரி.

இந்த, காவல் துறை உயர் அதிகாரி, மக்களுக்குப் பாதுகாப்புத் தர, உறக்கத்தைப் பொருட்படுத்தாமல், கடமை உணர்வோடு, காவல் வலம் வந்து கொண்டிருக் கிறார்.

இந்தக் காவல் மறவனின், வில்லில் .இருந்து புறப் பட்டுப் போகிற அம்புகள். குறி தப்புவதே இல்லை.

வலிமையான ஒரு புலி. வலிமையான ஒரு யானையை ஊடுருவிப் பார்ப்பதைப் போல், பாண்டிய மன்னனின் காவல் அதிகாரிகள், மக்கள் விரோதிகளை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாண்டிய மன்னனின், ஊர் காப்பாளர்கள், காவல் காப்பதால், மதுரை மக்கள், அச்சம் இல்லாமல், நிம்ம தியாக உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மாங்குடி மருதனார்.
மதுரைக் காஞ்சி.
பத்துப்பாட்டு
அடிகள் - 643 முதல் 653 வரை.



" வயக் களிறு பார்க்கும் வயப் புலி போல,
துஞ்சாக் கண்ணர், அஞ்சாக் கொள்கையர்,
அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர், செறிந்த,
நூல் வழிப் பிழையா நுணங்கு நுண் தேர்ச்சி,
ஊர் காப்பாளர், ஊக்கருங் கணையினர்,
தேர் வழங்கு தெருவில் நீர் திரண்டு ஒழுக,
மழை அமைந்து உற்ற அரைநாள் அமயமும்,
அசைவிலர் எழுந்து, நயம் வந்து வழங்கலின்,
கடவுள் வழங்கும் கையறு கங்குலும்,
அச்சம் அறியாது ஏமம் ஆகிய,
மற்றை யாமம் பகல் உறக் கழிப்பி.."

**கதை -29.**

## முற்றம்.

ஒரு பெரிய வீடு.

அந்த வீட்டில் திருமணம் ஆன, ஒரு பெண் இருக்கிறாள். அவள் நேற்று இரவு. நல்ல கள்ளை, நல்லாக் குடிச்சிட்டு, நல்ல போதையில் படுத்திருக்கிறாள். அவள் ஏராளமான தங்க ஆபரணங்கள் அணிந்திருக்கிறாள். அந்த ஆபரணங்களில், முத்துக்கள் கோர்க்கப்பட்டிருக்கிறது.

அவள் முற்றத்தில், பழைய மண்ணை அள்ளிவிட்டு, புதுக்குருத்து மண் கொண்டாந்து , விரிச்சி வச்சிருக்காக. அந்த முற்றத்தில், பாக்கு மரங்கள் இருக்கு. அந்தப் பாக்கு மரங்களில் இப்பொழுதான், பிஞ்சு பிடிக்க ஆரம்பித்திருக்கிறது. அந்தப் பிஞ்சுப் பாக்குகளில், வெம்பிய பிஞ்சுகள். அந்த முற்றம் பூராவும் உதிர்ந்து கிடக்கிறது. தங்க ஆபரணங்களும் அந்த முற்றத்தில் கெடக்கு. அந்தத் தங்க ஆபரணங்களில் கோர்த்திருந்த முத்துக்கள், அந்த முற்றம் பூராவும் சிதறிக் கிடக்கிறது. தலையில் சூடி, வாடிய பூக்களும், அந்த முற்றத்தில் கிடக்கிறது.

பொழுது இன்னும் விடியவில்லை.

அந்தப் பெண், முற்றத்தில் உட்கார்ந்திருக்கிறாள்.



அவள் போதையில், கழட்டிக் கழட்டி எறிந்த தங்க ஆபரணங்களையும், சிதறிக் கிடக்கிற முத்துக்களையும், பொறுக்கிக் கொண்டிருக்கிறாள்.

மாங்குடி மருதனார்.
மதுரைக் காஞ்சி.
பத்துப்பாட்டு
அடிகள் - 678 முதல் 686 வரை.

" வானம் நீங்கிய நீல் நிற விசும்பின்,
மின்னு நிமிர்ந்தனையர் ஆகி, நறவு மகிழ்ந்து,
மாண் இழை மகளிர், புலர்ந்தனர், பரிந்த,
பரூஉக் காழ் ஆரம் சொரிந்த முத்தமொடு,
பொன் சுடு நெருப்பின் நிலம் உக்கென்ன,
அம் மென் குரும்பைக் காய் படுபு, பிறவும்,
தரு மணல் முற்றத்து அரி ஞமிறு ஆர்ப்ப,.
மென் பூஞ் செம்மலொடு நன் கலம் சீப்ப.."



## கதை -30.

## மழை மேகங்கள்.

ஒரு மலை.

அந்த மலைமேல், மழை மேகங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கிறது. மழை மேகங்கள், மேலும் மேலும் வந்து வந்து, குவிந்து, அந்த மலையைக் கண்ணுக்குத் தெரியாமல் மூடி மறைத்து விட்டது.

எங்கும் இருட்டு.

மழை, கொட்டு கொட்டு என்று கொட்டுகிறது.

ஒரு பெரிய கடலில் இருந்து, அந்த மழை மேகங்கள், சுமக்க முடியாமல் அள்ளிக் கொண்டு வந்த அவ்வளவு தண்ணீரையும், கொஞ்ச நேரத்தில் பெய்து தீர்த்துவிட்டது.

இப்போது அந்த மழை மேகங்களிடம், கொஞ்சம் தான் தண்ணீர் மிச்சம் இருக்கிறது. அந்த மழை மேகங்கள், யோசித்து யோசித்து இப்போது சிக்கனமாகப் பெய்கிறது.

சிறு சிறு துளியாகப் பெய்கிறது.

ஒரு ஒரு துளியாகப் பெய்து கொண்டிருக்கிறது.

நக்கீரனார்.
நெடுநல் வாடை.
பத்துப்பாட்டு
அடிகள் - 18 முதல் 20 வரை.

" கயல் அறல் எதிர, கடும் புனல் சாஅய்,
பெயல் உலந்து எழுந்த பொங்கல் வெண் மழை,
அகல் இரு விசும்பில் துவலை கற்ப.."



கதை -31.

## ஒரு யானையின் தந்தங்களில் முத்துக்கள் இருக்கிறது.

ஒரு காடு.

அந்தக் காட்டில் உயரமான ஒரு மூங்கில் மரம் இருக்கிறது. அந்த மூங்கில் மரத்தின் உச்சியில், நெல் விளைந் திருக்கிறது.

அந்தக் காட்டில், ஒரு, பெரிய ஆண் யானை இருக்கிறது. அந்த யானையின் தந்தங்களில், அழகான முத்துக்கள் விளைந்திருக்கிறது.

அந்த யானை, அந்த மூங்கில் மரத்தில் விளைந் திருக்கிற நெல்லை, அண்ணாந்து பார்க்கிறது. அது அந்த நெல்லைப் பறிக்க ஆசைப்படுகிறது. அது தன் முன்கால்கள் இரண்டையும் மேலே தூக்குகிறது. அது தன் தும்பிக்கையை, அந்த மூங்கில் மரத்தின் உச்சிக்குக் கொண்டு போகிறது. அது அந்த நெல்லைப் பறிக்க கடுமையாகப் பிரயாசைப்படுகிறது. அது எவ்வளவு முயற்சி செய்தும், அந்த நெல்லை, அந்த யானையால் பறிக்க முடியவில்லை. அது களைத்துவிட்டது.

அந்த யானை, தன் நீளமான தும்பிக்கையைச் சுருட்டுகிறது. அது சுருட்டிய தன் தும்பிக்கையைத் தன்

தந்தங்களின் மேல் மெள்ள வைக்கிறது.

*கபிலர்.*
*குறிஞ்சிப் பாடடு.*
*பத்துப்பாட்டு*
*அடிகள் - 35 முதல் 36 வரை.*



" நெல்கொள் நெடுவெதிர்க்கு அணந்த யானை,
முத்துஆர் மருப்பின் இறங்குகை கடுப்ப.."

## கதை - 32.
## மகிழ்ச்சியான நேரம்.

ஒரு காடு.

அந்தக் காட்டில், ஒரு பெரிய மரம் இருக்கு. அந்த மரத்தில் கிளைகள் ஏராளமா இருக்கு. அந்தப் பெரிய மரம், பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு பெண் வண்டு.

அது பறந்து பறந்து வந்து, அந்தப் பெரிய மரத்தில் ஒரு தாழ்ந்த கிளையில், ஒரு பூவில் உட்காருகிறது. அந்தப் பெண் வண்டுக்கு யாழ் இசையைப் போல், இனிமையான குரல். அது தன் இனிமையான குரலால் கணவனைக் கூப்பிடுகிறது.

அந்த ஆண் வண்டு, மனைவி கூப்பிட்டதும், அது வேகமாகப் பறந்து மனைவியிடம் வருகிறது. அது, மனைவியிடம் ரொம்ப நெருங்கி உட்காருகிறது. அந்த வண்டுகளுக்கு அது மகிழ்ச்சியான நேரம்.

ஒரு மனிதன், அந்த வண்டுகள் இணைந்து உட்கார்ந் திருந்த, அந்தப் பெரிய மரத்தின் தாழ்ந்த கிளையை வளைத்து



ஒடிக்கிறான்.

கபிலர்.

குறிஞ்சிப் பாட்டு.

பத்துப்பாட்டு

அடிகள் - 146 முதல் 149 வரை.

"......... ....... பாலை வல்லோன்,
கைகவர் நரம்பின் இம்மென இமிரும்,
மாதர் வண்டொடு சுரும்பு நயந்து இறுத்த,
தாது அவிழ் அலரித் தாசினைப் பிளந்து.."



**கதை - 33.**

## ஒரு யானையின் கோவம்.

ஒரு பெரிய தினைக்காடு.

அந்தத் தினைக்காட்டில் ஒரு பெரிய ஆண் யானை நுழைந்திருக்கிறது. அது அந்தத் தினைக்காட்டில், தினைக் கருதுகளை, வளைத்துப் பிடித்துத் தின்று கொண்டிருக்கிறது.

வேடர்கள், அந்த யானையைத் துரத்துவதற்கு, அம்புகளை விடுகிறார்கள். அவர்கள் வில்லில் இருந்து புறப்பட்டுப் போகிற அம்புகள். அந்த யானையை உரசிக் கொண்டு போகிறது.

அந்த யானை, வேடர்களின் கூர்மையான அம்புக் குப் பயந்துகொண்டு, அங்கிருந்து ஓடுகிறது. அது ஓட்டமாய் ஓடி ஓடி ரொம்ப தூரத்துக்கு வந்து விட்டது. அந்த யானையை வேடர்களின் அம்புகள் இனி தொட முடியாது.

அந்தப் பெரிய ஆண் யானை, பாதுகாப்பான இடத்தில் நின்று கொண்டிருக்கிறது. அது இப்போது, வேடர்களைக் கொல்லத் துணிகிறது. அது அங்குள்ள மரங்களை, வேரோடு புடுங்குகிறது. அது பெரிய பெரிய மரங்களின் பெரிய பெரிய கிளைகளை ஒடிக்கிறது. அந்த

யானை, கோவத்தோடு அந்த மரங்களைத் தூக்கி, அந்த வேடர்களைக் குறி வைத்து எறிந்து கொண்டிருக்கிறது.

கபிலர்.
குறிஞ்சிப் பாட்டு.
பத்துப்பாட்டு
அடிகள் - 156 முதல் 164 வரை.



"...... ...... ..... வாய் மடுத்து,
இரும் புனம் நிழத்தலின், சிறுமை நோனாது,
அரவு உறழ், அம் சிலை கொளீஇ நோய் மிக்கு,
உரவுச் சின முன்பால் உடல் சினம் செருக்கி,
கணை விடு(பு), புடையூ, கானம் கல்லென,
மடி விடு வீளையர் வெடி படுத:து எதிர,.
கார்ப் பெயல் உருமின் பிளிறி, சீர்த்தக,
இரும் பிணர்த் தடக் கை இரு நிலம் சேர்த்தி,
சினம் திகழ் கடாஅம் செருக்கி, மரம் கொல்பு.."

## கதை - 34.

## புகை.

ஒரு குளம்.

அது ஆழமான பெரிய குளம்.

அந்தக் குளத்தில் நெய்தல் பூக்கள் அழகாகப் பூத்துக் கொண்டிருக்கிறது. அந்தக் குளத்துக்கு அருகில், ஒரு கரும்பு ஆலை இருக்கிறது. அந்த ஆலையில், எப்போதும், கரும்புச்சாறைக் காய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆலையில் இருந்து, எப்போதும், புகை வெளியே வந்து கொண்டிருக்கிறது. அந்தப் புகை, அந்தக் குளத்தில் பூத்துக் கொண்டிருக்கிற பூக்களை, சுட்டுப் பொசுக்குகிறது. ஆலைப் புகையால், அழகான அந்த நெய்தல் பூக்கள் கருகுகின்றன.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
பட்டினப்பாலை.
பத்துப்பாட்டு
அடிகள் - 9 மதல் 12 வரை.



" கார்க் கரும்பின் கமழ் ஆலைத்
தீத் தெறுவின், கவின் வாடி,
நீர்ச் செறுவின் நீள் நெய்தல்
பூச் சாம்பும்.."

கதை - 35.

## நடைவண்டி.

ஒரு பெரிய வீடு.

அந்தப் பெரிய வீட்டின் முற்றத்தில், நெல் காயப் போட்டிருக்கு. ஒரு பெண், அந்த நெல்லுக்குக் காவலுக்கு இருக்கிறாள். அவள், காதுகள், நீளமாக வடிந் திருக்கிறது. அவள் தன்னுடைய நீளமான காதுகளில், அழகான தங்க நகைகள் அணிந்திருக்கிறாள்.

ஒரு கோழி, அந்த முற்றத்துக்கு வருகிறது. அது அந்த நெல்லைக் கொத்துகிறது. அந்தப் பெண் தன் காதுகளில் அணிந்திருந்த நகைகளில் ஒரு நகையைக் கழட்டி, அந்தக் கோழியை எறிகிறாள்.

ஒரு குழந்தை, அந்த முற்றத்துக்கு வருகிறான். அவன், அழகான தன் கால்களில், அழகான தங்கக் கொலுசுகள் அணிந்திருக்கிறான்.அவன் ஒரு நடை வண்டியை உருட்டிக் கொண்டு, அந்த முற்றத்துக்கு வந்திருக்கிறான். அவன் அந்த முற்றத்துக்கு வந்ததும், அவன், நடை வண்டி நின்றுவிட்டது. அந்த நடை வண்டியை, முன்னால் நகர விடாமல் தடுத்துக் கொண்டிருந்தது ஒரு நகை.



அந்த முற்றத்தில், நெல்லுக்குக் காவலுக்கு இருந்த பெண், நகையைக் கழட்டி கோழியை எறிந்தாளே....அந்தத் தங்க நகைதான் அது.

*கடியலூர் உருத்திரங் கண்ணனார்.*
*பட்டினப்பாலை.*
*பத்துப்பாட்டு*
*அடிகள் - 20 முதல் 26 வரை.*

" அகல் நகர் வியன் முற்றத்து,
சுடர் நுதல், மட நோக்கின்,
நேர் இழை மகளிர் உணங்கு உணாக் கவரும்,
கோழி எறிந்த கொடுங் கால் கனங் குழை,
பொன் கால் புதல்வர் புரவி இன்று உருட்டும்,
முக் கால் சிறு தேர் முன் வழி விலக்கும்.."



**கதை - 36.**

## வெள்ளை மாளிகை.

ஒரு பெரிய மாளிகை. அது. வெள்ளையா, வெள்ள வெளேர்னு, அழகாருக்கு.

அந்த மாளிகை, சோழ அரசன் கரிகால் பெருவளத் தானுக்குச் சொந்தமானது. அந்த மாளிகையை, மிகச் சிறந்த ஓவியர்களால் வரையப்பட்ட, அழகான ஓவியங்கள் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

அந்தப் பெரிய மாளிகைக்கு, எப்போதும் தேர்கள் வந்து கொண்டிருக்கிறது.அந்தத் தேர்களின் சக்கரங்கள், உருண்டு உருண்டு, அந்தப் பெரிய தெரு தூசியாருக்கு. தேர்கள் வரும்போதெல்லாம், அந்தத் தூசி பறக்கிறது. அந்தத் தூசி, அழகான அந்த வெள்ளை மாளிகையைத் தூசியாக்கு கிறது. அந்த வெள்ளை மாளிகையை, அலங் கரித்துக் கொண்டிருக்கிற ஓவியங்களையும், அந்தத் தூசி, தூசியாக்கிக் கொண்டிருக்கிறது.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
பட்டினப்பாலை.
பத்துப்பாட்டு
அடிகள் - 47 முதல் 50 வரை.

" தேரோடத் துகள் கெழுமி
நீறாடிய களிறு போல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயில் மாசூட்டும்.."



## கதை - 37.

## வேள்விப் புகை.

ஒரு காடு.

அந்தக் காடு, பச்சப் பசேர்னு, பசுமையாக இருக்கிறது. அந்தக் காட்டில், ஒரு பெரிய மரம். அந்த மரத்தில், இரண்டு குயில்கள், அமைதியாக உட்கார்ந்திருக்கிறது.

அந்தக் காட்டில், முனிவர்களின் ஒரு தவப்பள்ளி இருக்கிறது. அந்தத் தவப்பள்ளியில், முனிவர்கள் யாகம் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், அந்த, யாகத் தீயில், நெய் ஊற்றுகிறார்கள். விறகுகளை அடுக்குகிறார்கள். அந்த யாக அடுப்பில், தீ கொளுந்து விட்டு எரிகிறது. ஏகப்பட்ட புகையும், அந்த யாக அடுப்பில் இருந்து எழும்புகிறது. அந்தப் புகை, அந்தக் காடு முழுவதும் பரவுகிறது.

அந்தக் காட்டில் ஒரு பெரிய மரத்தில், அமைதியாக உட்கார்ந்திருந்த அந்தக் குயில்கள், வேள்விப் புகையால், மூச்சுவிட முடியாமல் திணறுகின்றன. ஆண் குயில், அழகான தன் கறுத்த மனைவியை அழைத்துக் கொண்டு,

காற்று மாசு இல்லாத இடத்தைத் தேடிப் போய்க் கொண்டிருக்கிறது.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
பட்டினப்பாலை.
பத்துப்பாட்டு
அடிகள் - 53 முதல் 56 வரை.



"தவப்பள்ளித் தாழ்காவின்
அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்
ஆவுதி நறும்புகை முனைஇக் குயில்தம்
மாயிரும் பெடையொடு இரியல் போகி.."

## கதை - 38.

## போர் பயிற்சி.

ஒரு காடு.

அது, ஒரு, தேரிக்காடு.

அந்தத் தேரிக்காடு பூராவும், அவ்வளவும், குருத்து மண்ணாருக்கு. அந்தத் தேரிக்காட்டில், முன்னோர்கள், மரக்கன்றுகளை நட்டி வைத்திருக்கிறார்கள். அந்தக் கன்று கள், இன்று, பெரிய பெரிய மரங்களாக வளர்ந்திருக்கிறது. அந்த நூறு வயது மரங்கள், பெரிய பெரிய கிளைகளைப் பரப்பிக்கொண்டு, நிழல் கொடுத்துக்கொண்டு நிற்கின்றன. இங்கே ஒரு பயிற்சிக் கூடம் இருக்கிறது.

இரண்டு பெரிய கிராமங்களில் இருந்து, வீரர்கள், இங்கே போர் பயிற்சி பெற வந்திருக்கிறார்கள்.

ஒரு அணி, ஒரு கடல்கரைக் கிராமத்தில் இருந்து வந்திருக்கிறது. இந்த வீரர்கள்அடப்பம் பூ சூடியிருக்கிறார் கள். இவர்கள் கூனி களைச் சுட்டுத் தின்கிறார்கள்.

இன்னொரு அணி, ஆற்றுப்பாசனம் உள்ள, நெல்விளையும் ஒரு கிராமத்தில் இருந்து வந்திருக்கிறது. இவர்கள் ஆம்பல் பூ சூடியிருக்கிறார்கள். இவர்கள் வயல் ஆமைகளைக் கறி வைத்துச் சாப்பிடுகிறார்கள்.



இந்த இரண்டு அணி வீரர்களும், ரத்த சம்பந்தம் உள்ளவர்கள், இவர்கள் ஏற்கனவே போர் பயிற்சி பெற்ற சிறந்த இராணுவ வீரர்கள்.

போர் பயிற்சி கூடத்தில், பார்வையாளர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

தேரி, மண்ணில், இரண்டு அணி வீரர்களும், எதிர் எதிரே நின்று கொண்டிருக்கிறார்கள்

போர் ஆரம்பம் ஆகிறது.

இந்த இரண்டு அணி, வீரர்களும், பெரும் சினத்தோடு மல்யுத்தம் செய்கிறார்கள். இவர்கள் போர் செய்வதில் சம அளவு வலிமையை நிரூபிக்கிறார்கள். இந்த மல்யுத்தப் பயிற்சியில் ஒரு வீரனும் தோல்வி அடைய வில்லை. ஒரு வீரனும் வெற்றி பெறவும் இல்லை. மல்யுத்தப் பயிற்சி நிறைவடைகிறது.

ஆயுதப் போர் தொடங்குகிறது.

இரண்டு அணி வீரர்களும், ஆயுதங்களைக் கொண்டு, ஒருத்தரை ஒருத்தர் தாக்குகிறார்கள். இவர்கள் சம அளவு வலிமையோடு, ஆயுதங்களைக் கொண்டு போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எந்த வீரனும், வெற்றி பெறவும் இல்லை. எந்த ஒரு வீரனும், புறமுதுகு காட்டி ஓடவும் இல்லை.

ஆயுதப் போர் பயிற்கி நிறைவடைகிறது.

இந்தச் சிறந்த வீரர்கள், கல் எறியும், பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த வீரர்களின் கவணில் இருந்து புறப்பட்டுப் போகிற கற்கள், பனைமரங்களின் மண்டையைக் காயப்படுத்துகிறது. பனங்காடு அலறுகிறது. பனை மரங்களில் கூடு கட்டி வாழ்ந்து கொண்டிருந்த பறவைகள், அங்கிருந்து வெளியேறி வேகமாகப் பறந்து போய்க் கொண்டிருக்கிறது.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
பட்டினப்பாலை.
பத்துப்பாட்டு
அடிகள் - 59 முதல் 74 வரை.



" முது மரத்த முரண் களரி,
வரி மணல் அகன் திட்டை,
இருங் கிளை, இனன் ஒக்கல்,
கருந் தொழில், கலி மாக்கள்
கடல் இறவின் சூடு தின்றும்,
வயல் ஆமைப் புழுக்கு உண்டும்,
வறன் அடும்பின் மலர் மலைத்தும்
புனல் ஆம்பல் பூச் சூடியும்,
நீல் நிற விசும்பின் வலன் ஏர்பு திரிதரும்,
நாள்மீன் விராஅய கோள்மீன் போல
மலர் தலை மன்றத்துப் பலர் உடன் குழீஇ,
கையினும் கலத்தினும் மெய் உறத் தீண்டி,
பெருஞ் சினத்தால் புறக்கொடா அது,
இருஞ் செருவின் இகல் மொய்ம்பினோர்,
கல் எறியும் கவண் வெரீஇப்,
புள் இரியும் புகர்ப் போந்தை.."

## கதை - 39.

## யானை.

ஒரு காடு.

வேடர்கள், அந்தக் காட்டில், யானையை உயிரோடு பிடிப்பதற்குக் குழி தோண்டி வைத்திருக்கிறார்கள். அந்தக் குழிக்கு மேல், பந்தல் போட்டு, அந்தப் பந்தலுக்கு மேல் மண் போட்டு, அந்தக் குழியைப் பொய்யாக மூடி வைத்திருக் கிறார்கள்.

ஒரு பெரிய ஆண் யானை, தன் இளம் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு, அது கம்பீரமாக, மனைவிக்கு முன்னால் வந்து கொண்டிருந்தது. தன் மனைவிக்கு முன்னால், கம்பீரமாக நடந்து வந்த அந்தப் பெரிய ஆண் யானை, வேடர்களின் குழியில் விழுந்து விட்டது.

அந்த யானையின் இளம் மனைவி கதறிக் கதறி அழுகிறது.

பலசாலியான அந்த ஆண் யானை, அந்தக் குழியில் இருந்து தப்பிக்க முயற்சி செய்கிறது. அது கூர்மையான தன் தந்தங்களால், அந்தக் குழியின் கரையைக் குத்தி இடிக்கிறது. அந்த யானை, அந்தக் குழியின் கரையைக் குத்திக் குத்தி, இடித்து இடித்து, அந்தக் குழியை மண்ணால் நிரப்பி மூடி



விட்டது. அந்த யானை அந்தக் குழியில் இருந்து, தப்பி வெளியே வந்து விட்டது.

அந்தப் பெரிய ஆண் யானை, தன் இளம் மனைவி யின் கையைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்து வேக மாகப் போய்க் கொண்டிருக்கிறது.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்.<br>
பட்டினப்பாலை.<br>
பத்துப்பாட்டு<br>
அடிகள் - 223 முதல் 224 வரை.

"அருங்கரை கவியக் குத்திக் குழி கொன்று
பெருங்கை யானை பிடிபுக்காங்கு.."



**கதை -40.**

## போரில் அழிந்த ஒரு கிராமம்.

ஒரு சிறிய கிராமம்.

அந்தக் கிராமத்தில், ஒரு, பெரிய, ஏரி இருந்தது. அந்த ஏரியில், பெரிய பெரிய, முதலைகள் கிடந்தது. நெய்தலும், குவளையும், அந்த ஏரியில் பூத்துக் கொண்டி ருந்தது. வயல்களில், கரும்புகள் பூத்துக் கொண்டிருந்தது. நெல் அறுவடைக்குத் தயாராக இருந்தது.

ஒரு நாள், மன்னன் திருமாவளவனின் படை....அந்தக் கிராமத்திற்கு வந்தது. அந்தப் படை...அந்தப் பெரிய ஏரியை உடைத்தது.

அறுவடைக்குத் தயாராக இருந்த நெல் வயல்களை அழித்தது.

பூத்துக் கொண்டிருந்த கரும்பு வயல்களும் அழிந்தது.

அந்தப் பெரிய ஏரியும் அழிந்து விட்டது.

ஏரியும், நெல் வயல்களும், கரும்பு வயல்களும் இப்போது தரிசு நிலங்கள் ஆகிவிட்டன. இந்தத் தரிசு நிலங்களில் அருகம்புல்லும், கோரையும் வளர்ந்திருக்கிறது. இங்கே மான்கள், துள்ளி விளையாடிக் கொண்டிருக்கிறது.

*கடியலூர் உருத்திரங் கண்ணனார்.*
*பட்டினப்பாலை.*
*பத்துப்பாட்டு*
*அடிகள் - 240 முதல் 245 வரை.*



*" வெண் பூக் கரும்பொடு செந்நெல் நீடி,*
*மா இதழ்க் குவளையொடு நெய்தலும் மயங்கி,*
*கராஅம் கலித்த கண் அகன் பொய்கை,*
*கொழுங் கால் புதவமொடு செருந்தி நீடி,*
*செறுவும் வாவியும், மயங்கி, நீர் அற்று,*
*அறு கோட்டு இரலையொடு மான் பிணை உகளவும்."*

## கதை - 41.

## பகல் கொள்ளை.

ஒரு சிறிய கிராமம்.

அந்தக் கிராமம். மன்னன் திருமாவளவனால் தோற்கடிக்கப்பட்ட, ஒரு சிறிய அரசனுக்குச் சொந்தமானது.

அந்தக் கிராமத்தில். அழகான ஒரு நல்ல வீடு இருக்கு. அந்த வீடு சுண்ணாம்பு அடித்து, சுவர்களும், தூண்களும், வெள்ளையாய் அழகாய் இருக்கு. அந்த நல்ல வீட்டில் யாத்திரிகர்களுக்கு, எப்போதும் விருந்து நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் வளர்க்கிற கிளிகள் எப்போதும் பால் குடித்துக் கொண்டு, மகிழ்ச்சியில் மழலை மொழி பேசிக் கொண்டு இருக்கிறது. அவர்களிடம் ஏராளம் நெல் கூடுகள் இருக்கிறது. அந்தப் பெரிய பெரிய நெல் கூடுகளில், நெறைய்யா நெறைய்யா நெல் இருக்கு.

ஒரு நாள்...ஒரு பகல் நேரம்...

ஒரு பெரிய கொள்ளைக் கூட்டம் கொலை வில்லோடு உடுக்கு அடித்துக் கொண்டு வந்தது. அந்தக் கொள்ளைக் கூட்டம், அழகான அந்த நல்ல வீட்டிற்குள் நுழைந்தது. அது, அந்த வீட்டில் இருந்த நெல்லை எல்லாம் கொள்ளை அடித்துக் கொண்டு போய் விட்டது.



அந்த நல்ல வீடு, இப்போது பாழடைந்து கிடக்கிறது. அந்த வீட்டிலிருந்த நெல் கூடுகள் எல்லாம், நெல் இல்லாமல், வெற்றுக் கூடுகளாக இருக்கிறது. அந்த வெற்றுக் கூடுகளில், கூகைகள் அடைந்திருக்கிறது. அந்தக் கூகைகளுக்கு, அந்தப் பாழடைந்த வீட்டில் இரை கிடைக்கவில்லை. அந்தக் கூகைகள், பசியோடு பகல் நேரத்திலும், அழுது கொண்டிருக்கிறது.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
பட்டினப்பாலை.
பத்துப்பாட்டு
அடிகள் - 261 முதல் 268 வரை.

" கொடுங் கோல் மாடத்து நெடுங் கடைத் துவன்றி,
விருந்து உண்டு ஆசைப் பெருஞ் சோற்று அட்டில்,
ஒண் சுவர் நல் இல் உயர் திணை இருந்து,
பைங் கிளி மிழற்றும் பால் ஆச் செழு நகர்,
தொடு தோல் அடியர் துடி படக் குழீஇ,
கொடு வில் எயினர் கொள்ளை உண்ட,
உணவு இல் வருங் கூட்டு உள்ளகத்து இருந்து,.
வளை வாய்க் கூகை நன் பகல் குழறவும்.."



### கதை -42.

## கண்கள் தப்புத் தப்பாகவும் சொல்லித் தரும்.

ஒரு பருந்து.

அது, ரொம்ப நேரமாய், வானத்தில் சுற்றிச் சுற்றி வந்து, இரை தேடிக் கொண்டிருந்தது. அது, அவ்வளவு நேரம் இரை தேடியும், அதுக்கு இரை கிடைக்கவில்லை.

ஒரு காட்டில், ஒரு இடத்தில், இறைச்சி கொட்டிக் கிடக்கிறது. அது, செக்கச் செவேரென்று புதுசா இருக்கிறது.

அந்தப் பருந்தின் இரண்டு கண்களும் அந்த இறைச்சியைப் பார்க்கிறது.

பருந்தின் கண்கள் பருந்திடம் சொல்லியது.

"அதோ பார்...உனக்கு முன்னால் இறைச்சி குவிந்து கிடக்கிறது.."

" வானத்திலேயே சுற்றிக் கொண்டிருக்காதே..."

" தரையில் இறங்கு..."

பருந்து வேகமாகத் தரையில் இறங்கியது. அது, இறைச்சி கிடந்த இடத்தில் போய் உட்கார்ந்தது. அது தன்னால் எவ்வளவு அள்ள முடியுமோ அவ்வளவு இறைச்சியை அது அள்ளியது. அது அங்கிருந்து பறந்து போய் ஒரு பாறையில் உட்கார்ந்திருக்கிறது. அது அந்த இரையைப்

பேராசையோடு விழுங்குகிறது. அந்தப் பருந்தால் அந்த இரையை விழுங்க முடியவில்லை.

அது இறைச்சி இல்லை...அது...செக்கச் செவேரென்று பூத்திருந்த செங்காந்தள் பூ.

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங் கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 145 முதல் 148 வரை.



" தீயின் அன்ன ஒண் செங் காந்தள்.
தூவல் கலித்த புது முகை ஊண் செத்து,
அறியாது எடுத்த புன் புறச் சேவல்,
ஊஉன் அண்மையின், உண்ணாது உகுத்தென.."

**கதை - 43.**

**மலைமகள்.**

ஒரு மலை.

அந்த மலைமேல், ஒரு சிறிய கிராமம் இருக்கிறது.

அந்தக் கிராமத்தில் ஒரு சிறிய குடிசை.

அந்தக் குடிசையில், ஒரு பெண் இருக்கிறாள்.அவள் ஒரு வேட்டை நாய் வளர்க்கிறாள். அது ஒரு பெண் நாய்,

அந்த வேட்டை நாய் வேட்டைக்குப் போயிருந்தது. அது ஒரு உடும்பைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறது.

அவள், அடுப்பில் உலை வைத்திருக்கிறாள். அந்த உலையில், புளித்தண்ணியும், மோர்த் தண் ணியும் கலந்த, புளிச்சாணி இருக்கிறது. உலை கொதிக்கிறது. அவள் மூங்கில் அரிசியையும், உடும்புக் கறியையும் உலையில் போடுகிறாள். அது வெந்து கொண்டிருக்கிறது. அவள் பானையில் அடிப் பிடிக்காமல் இருப்பதற்குக் கிண்டிக் கொண்டிருக்கிறாள். பிரியாணி, வெந்து மணக்கிறது. அவள், கிண்டக் கிண்ட அந்தப் பிரியாணியின் மணம் ஊரெல்லாம் மணக்கிறது.

அழகான அந்த மலைமகள், உச்சி எடுத்துத் தலைவாரி இருக்கிறாள். அவள் தலை நிறையப் பூ வைத்திருக்கிறாள்.



அவள் கணவனை, எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 177முதல் 183 வரை.

"பிணவு நாய் முடுக்கிய தடியொடு விரைஇ,
வெண் புடைக் கொண்ட துய்த் தலைப் பழனின்,
இன் புளிக் கலந்து மா மோர் ஆக,
கழை வளர் நெல்லின் அரி, உலை ஊழ்த்து,
வழை அமை சாரல் கமழத் துழைஇ,
நறு மலர் அணிந்த நாறு இரு முச்சிக்,
குறமகள், ஆக்கிய வால் அவிழ் வல்சி.."



**கதை – 44.**

## மலைக் கிராமங்களில் ரொம்ப நாள் தங்கக் கூடாது.

ஒரு மலை.

அந்த மலையில், தெற்கே இருந்து, வடக்காமல், ஒரு, பாதை போகிறது.

ஒரு மூத்த கலைஞர் மன்னன் நன்னனைப் பார்த்து விட்டு, அந்த மலைப் பாதையில் திரும்பி வந்து கொண்டிருக் கிறார். அவர் வடக்கேயிருந்து, தெற்காமல் வருகிறார்.

ஒரு இளங் கலைஞன். இவனுக்குப் பெரிய குடும்பம். இவன், தன்னுடைய பெரிய குடும்பத்தோடு, மன்னன், நன்னனைப் பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறான். இவன், தெற்கேயிருந்து வடக்காமல் போகிறான்.

இவர்கள் ஓர் இடத்தில் சந்திக்கிறார்கள்.

அந்த மூத்த கலைஞர் அந்த மலைப்பாதை நெடு கிலும் உள்ள நன்மைகளையும், தீமைகளையும், அந்த இளைஞனிடம் விவரமாகச் சொல்லுகிறார்.

"நீங்கள் ஒரு மலைக் கிராமத்தில் இருந்து, இன்னொரு மலைக் கிராமத்திற்குப் போவீர்கள்...அப்போது,

அந்த மலைப் பாதை நெடுகிலும், குவளைப் பூக்கள், பூத்திருப்பதைப் பார்ப்பீர்கள்...அந்தப் பூக்களின் அழகு கண்களைப்பறிக்கும்.அந்தப் பூக்களைப் பறிக்கத் தோன்றும்... நீங்கள் அந்தப் பூக்களைப் பறிக்காதீர்கள்...அந்தப் பூக்களின் மேல், உங்கள் விரல் பட்டதும். ஜன்னி வந்து விடும்...பிழைப்பது கடினம்..."

"அந்த மலைப் பாதையில், அந்த மலையின் பெண் தெய்வங்கள் அங்கேயே நிரந்தரமாகத் தங்கி இருக்கிறது... தப்பித் தவறிக் கூட நீங்கள் அந்தப் பெண் தெய்வங்களைப் பார்த்து விடக் கூடாது...அந்தப் பெண் தெய்வங்கள் கண்ணில் பட்டால், உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும்.."

" நீங்கள்...மலைக் கிராமங்களில் ரொம்ப நாள் தங்கக் கூடாது...நீங்கள் அந்த மலைக் கிராமங்களில் இருந்து சீக்கிரம் வெளியேறி விடுங்கள்...நீங்கள் நிலக் கிராமங்களில் தங்குங்கள்.."

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 189 முதல் 192 வரை.



" நிரை இதழ்க் குவளைக் கடி வீ தொடினும்,
வரை அரமகளிர் இருக்கை காணினும்,
உயிர் செல வெம்பிப் பனித்தலும் உரியீர்,
பல நாள் நில்லாது, நில நாடு படர்மின்.."

**கதை – 45.**

## பொழுது விடிந்த பிறகு செல்லுங்கள்.

அந்த மூத்த கலைஞர் அந்த இளம் கலைஞனிடம் மேலும் சொல்கிறார்...

" இந்த மலைக் கிராமங்களில் விவசாயிகளுக்குப் பன்றிகளால் பெரிய தொல்லை, இந்த விவசாயிகள், இந்தப் பன்றிகளைக் கொல்ல, வழி நெடுகிலும், பொறி வைத்து இருக்கிறார்கள்.."

" இந்தப் பொறிகள் பழைய காலத்துப் பழைய பொறிகள் இல்லை. இந்தப் புதிய பொறிகள், புதிய தொழில் நுட்பங்களால் உருவாக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பொறிகளில் அகப்பட்ட பன்றிகளுக்கு மரணம் நிச்சயம்."

"பன்றிகளைக் கொல்ல வைத்திருக்கிற பொறி களில், நீங்கள் அகப்பட்டுக் கொள்ளாதீர்கள்,"

"நீங்கள் இரவில் பிரயாணம் செய்ய வேண்டாம். நீங்கள் இரவில் பாதுகாப்பான ஒரு இடத்தில் படுத்து உறங்குங்கள். நீங்கள் பொழுது விடிந்த பிறகு, உங்கள்



பிரயாணத்தைத் தொடருங்கள்.."

*இரணிய முட்டத்துப்*
*பெருங்குன்றூர் பெருங் கௌசிகனார்.*
*மலைபடுகடாம்.*
*பத்துப்பாட்டு*
*அடிகள் - 193 முதல் 196 வரை.*

"விளை புனம் நிழத்தலின், கேழல் அஞ்சி,
புழை தொறும் மாட்டிய இருங் கல் அடாஅர்,
அரும் பொறி உடைய, ஆறே, நன் இருள்,
அலரி விரிந்த விடியல், வைகினிர், கழிமின்."



## கதை – 46.

## கவண் கல்.

அந்த மூத்த கலைஞர், அந்த இளம் கலைஞனிடம் மேலும் சொல்கிறார்.

" இந்த மலையும், இந்தக் காடும், இங்குள்ள குறவர்களுக்குச் சொந்தமானது. குறவர்கள், காடுகளில் தினை விதைத்து இருக் கிறார்கள், தினைப் பயிர்கள், கருது வாங்கிக் கொண்டு இருக்கிறது. இந்தக் கருதுகளைத் திங்க யானைகள் கூட்டம் கூட்டமாக இங்கே வந்து கொண் டிருக்கிறது.."

"குறவர்கள், காட்டில் பரண் அமைத்திருக்கிறார் கள். அது உயரமான பரண், அவர்கள், பரண் மேல் ஏறி நின்று கொண்டு, அந்த யானைகளைக் குறி வைத்து, கவண் கல்லால் எறிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கவணிலிருந்து புறப்பட்டுப் போகிற கல், புயல் வேகத்தில் போகிறது. அந்தக் கல், அங்கே உயரமாக வளர்ந்திருக்கிற மூங்கில் மரங்களை உரசிக் கொண்டு போகிறது. ஒரு மூங்கில் மரத்தில், ஒரு குரங்கு, உட்கார்ந்திருக்கிறது. அந்தக் குரங்குக்கு, ஒரு குட்டியும் இருக்கிறது. அந்தக் குரங்கு, கவண்கல் வருகின்ற சத்தத்தைக் கேட்டதும், அது, குட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறது. குறவர்களின்

கவணில் இருந்து புறப்பட்டபோது, அந்தக் கல்லில் என்ன வேகம் இருந்ததோ, அதே வேகம் கடைசி வரைக்கும், அந்தக் கல்லில், குறையாமல் இருக்கிறது. குறவர்களின், கவணில் இருந்து புறப்பட்டு வருகிற, அந்தக் கல், கூற்றவனுக்குச் சமம். அந்தக் கல் உயிருக்கு ஆபத்தானது. "

" நீங்கள், கல் வருவதைக் கவனித்து எச்சரிக்கையாக நடக்க வேண்டும். கல் வரும்போது, மரத்துக்கு மரம், மறைந்து மறைந்து, கவனமாகப் போக வேண்டும்.

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 203 முதல் 210 வரை.



"புலந்து, புனிறு போகிய புனம் சூழ் குறவர்,
உயர் நிலை இதணம் எறி, கை புடையூஉ,
அகல் மலை இறும்பில் துவன்றிய யானைப்
பகல் நிலை தளர்க்கும் கவண் உமிழ் கடுங் கல்,
இரு வெதிர் ஈர்ங் கழை தத்தி, கல்லெனக்
கரு விரல் ஊகம் பார்ப்போடு இரிய,
உயிர் செகு மரபின் கூற்றத்து அன்ன,.
வரும், விசை தவிராது; மரம் மறையாக் கழிமின்."

## கதை -47.

## பிள்ளைகளைப் பாதுகாப்போடு அழைத்துச் செல்லுங்கள்.

அந்த மூத்த கலைஞர், அந்த இளம் கலைஞனிடம், மேலும் சொல்கிறார்..

"நீங்கள் போகும் வழியில், ஒரு காட்டாறு ஓடு கிறது. அந்தக் காட்டாற்றில் முதலைகள் வாழ்கின்றன. அந்த முதலைகள், யானைகளை விழுங்கக் கூடிய பலம் வாய்ந்தவைகள்."

" அந்த ஆற்றில் இரண்டு கரைகளும், செங்குத்தாக இருக்கிறது. ஆற்றில் இறங்குவதற்கும் கடினமாக இருக் கிறது..ஆற்றிலிருந்து வெளியே வரவும் கடினமாகத்தான் இருக்கிறது."

"அந்த ஆறு. பாசி பிடித்துப் போய், அவ்வளவும் பாசியாய்க் கெடக்கு. அந்தப் பாசி கடுமையாக வழுக்கு கிறது."

"அந்த ஆற்றில், நீர்ச் சுழிகள் இருக்கிறது. அந்த நீர்ச் சுழிகள், பயங்கரமாச் சுழண்டு சுழண்டு வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது.."

"அந்தக் காட்டாற்றில், காட்டு மரங்கள்,



நெருக்கமாக இருக்கிறது. அந்த மரங்களில், இலைகள் அடர்த் தியாக இருக்கிறது. பகல் நேரத்திலும், அங்கே வெளிச்சம் இல்லை. அந்தக் காட்டு மரங்களில், காட்டுக் கொடிகள் பின்னிக் கொண்டிருக்கிறது. நீங்கள் அந்தக் காட்டாற்றைக் கடக்கும் போது, அந்தக் காட்டுக் கொடிகளைப் பிடித்துக் கொண்டு, மெல்ல மெல்ல, நடந்து வாருங்கள், நீங்கள், உங்கள் பிள்ளைகளை ஒருத்தரை ஒருத்தர் பிடித்துக் கொண்டு அந்தக் காட்டாற் றைப் பாதுகாப்போடு கடந்து வாருங்கள்.

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 211 முதல் 218 வரை

"உரவுக் களிறு காக்கும் இடங்கர் ஒடுங்கி.
இரவின் அன்ன இருள் தூங்கு வரைப்பின்,
குமிழி சுழலும் குண்டு கய முடுக்கர்,
அகழ் இழிந்தன்ன, கான் யாற்று நடவை,
வழூஉம் மருங்கு உடைய; வழா அல் ஓம்பி,.
பரூஉக்கொடி வலந்த மதலை பற்றி,
துருவின் அன்ன புள் தலை மகர ரோடு,
ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின்.."



**கதை -48.**

## பாதையை மட்டும் தான் பார்க்க வேண்டும்.

அந்த மூத்த கலைஞர், அந்த இளம் கலைஞனிடம்; மேலும் சொல்கிறார்..

" நீங்கள் போகும் வழியில் மூங்கில் மரங்கள் நம்ப முடியாத உயரத்திற்கு வளர்ந்திருக்கின்றன. அந்த மூங்கில் மரத்தின் உச்சியில், குரங்கு தொங்கிக் கொண்டிருக்கும். அது கீழே விழுந்து விடுவதைப் போல், ஆபத்தான முறையில் தொங்கிக் கொண்டிருக்கும். அது திடீரென்று நாலுகால் பாய்ச்சலில், தாவிக் குதிக்கும். அது இன்னொரு மூங்கில் மரத்தில் முன்பு போலவே, ஆபத்தான முறையில் தொங்கிக் கொண்டிருக்கும். நீங்கள் அந்தக் குரங்கை, வேடிக்கை பார்த்துக் கொண்டு, நின்று கொண்டு இருக்கக் கூடாது.

" நீங்கள் போகும் வழியில், உயரமான பெரிய பெரிய மரங்கள் இருக்கிறது. அந்த மரங்களின் உச்சியில் தேன் கூடு கள். இருக்கிறது. அந்தத் தேன் கூடுகள் சப்பரம் மாதிரி அழகாக இருக்கிறது. அது அந்தரத்தில் தொங்கிக் கொண்டு இருப்பதைப் போல் தெரிகிறது. நீங்கள் மெய் மறந்து, அந்தத் தேன் கூட்டை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.

"நீங்கள் போகும் வழியில் அழகான மயில் தன் தோகையை விரித்து ஆடி ஆடிக் களைத்துப் போய் பரிதாபமாக நின்று கொண்டிருக்கும். நீங்கள் அந்த மயில் மேல் இரக்கப்பட்டு அந்த மயிலையே பார்த் துக் கொண்டு நின்று கொண்டிருக்கக்கூடாது. நீங்கள் கண்டதை எல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருப்பீர் களேயானால், உங்கள் பாதையைத் தவற விட்டு விடு வீர்கள்.

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 234முதல் 241 வரை.



"அலகை அன்ன வெண் வேர்ப் பீலிக்
கலவ மஞ்ஞை கட்சியில் தளரினும்,
கடும் பறைக் கோடியர் மகா அர் அன்ன,
நெடுங் கழைக் கொம்பர், கடுவன் உகளினும்,
நேர் கொள் நெடு வரை, நேமியின் தொடுத்த,
சூர் புகல் அடுக்கத்து, பிரசம் காணினும்,
ஞெரேரென நோக்கல், ஓம்புமின், உரித்தன்று,
நிரை செலல் மெல் அடி நெறி மாறு படுகுவீர்."

**கதை -49.**

## குகையில் தங்கி ஓய்வு எடுங்கள்.

அந்த மூத்த கலைஞர். அந்த இளம் கலைஞனிடம் மேலும் சொல்கிறார்...

"நீங்கள் போகும் பாதையில், தினைக் காடுகள் இருக்கிறது. அந்தக் காடுகளில், காவலர்கள், இரவு நேரத்திலும் முழித்திருந்து, விழிப்புடன் காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"இரவில் ஒரு பன்றி, அந்தத் தினைக்காட்டில் நுழைந்திருக்கிறது. காவல்காரன் உயரமான பரண் மேல் ஏறி நின்று கொண்டிருக்கிறான். அவன் அந்தப் பன்றியைக் குறிவைத்து, அம்பு விடுகிறான். அவன் வில்லில் இருந்து புறப்பட்டச் சென்ற, அந்த அம்பு, அந்தப் பன்றியைக் குத்துகிறது. அது தரையில் படுத்துப் புரள்கிறது. அந்தப் பன்றி, வலியில் துடிக்கிறது. அது வலியோடு ஓடுகிறது. அது ஓடி ஓடி ரொம்பத் தூரத்திற்கு வந்துவிட்டது. இப்போது அந்தப் பன்றியால் ஓட முடியவில்லை. அது கால்களை இழுத்துக் கொண்டு தவழ்ந்து தவழந்து போகிறது. உயிர் போகிற வலியில் அந்தப் பன்றியால் நகரவே முடியவில்லை.."

"காவல்காரன் கண்களுக்குத் தப்பி ஓடி வந்த அந்தப் பன்றி ஒரு இடத்தில் செத்துக் கிடக்கும். காவல்காரனின் அம்பு குத்தி செத்த அந்தப் பன்றியை நீங்கள் பார்த்தால் அதை எடுங்கள்,."

"அந்தக் காட்டில் பட்டுப்போன மூங்கில் மரங்கள் ஒன்றோடு ஒன்று உரசி தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கும். அந்தத் தீயில் அந்தப் பன்றியை வாட்டுங்கள். இறைச்சியில் புகை நாற்றம் வராதபடி கவனமாக வாட்டுங்கள். பன்றியின் கரிய முடியைச் சுரண்டி எடுங்கள்.."

"பன்றி இறைச்சியை செழிக்கத் தின்னுங்கள். மிச்சம் இருக்கிற பன்றி இறைச்சியைப் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள். சுனையில் தண்ணீர் குடியுங்கள்.."

" நீங்கள் அன்று இரவு உங்கள் பிள்ளைகளோடு பாதுகாப்பாக ஒரு குகையில் தங்கி ஓய்வெடுங்கள்.

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 242 முதல் 255 வரை.

" வரை சேர் வகுந்தின் கானத்துப் படினே.
கழுதில் சேணோன் ஏவோடு போகி,
இழுதின் அன்ன வால் நிணம் செருக்கி,
நிறப் புண் கூர்த்த நிலம் தின் மருப்பின்,
நெறிக் கெடக் கிடந்த; இரும் பிணர் எருத்தின்,
இருள் துணிந்தன்ன ஏனம் காணின்,
முளி கழை இழைந்த காடு படு தீயின்,
நளி புகை கமழாது, இறாயினிர் மிசைந்து,
துகள் அறத் துணிந்த மணி மருள் தெள் நீர்,
குவளை அம் பைஞ் சுனை, அசைவு விடப்பருகி,
மிகுத்துப் பதம் கொண்ட பரூஉக் கண் பொதியினிர்,
புள் கை போகிய புன் தலை மகாரோடு
அற்கு, இடை கழிதல் ஓம்பி, ஆற்ற, நும்
இல் புக்கன்ன, கல் அளை வதிமின்.."



## கதை - 50.

## இருண்ட காடு.

அந்த மூத்த கலைஞர் அந்த இளம் கலைஞனிடம். மேலும் சொல்கிறார்.

"நீங்கள் போகும் பாதையில், ஒரு இருண்ட காடு வருகிறது. அந்தக் காட்டில், பகலிலும் வெளிச்சத்தைப் பார்க்க முடியாது. மரங் கள் நெருக்கமாய், இலைகள் அடர்த்தியாய் இருப்பதால் அந்தக் காடு எப்போதும் இருட்டாய் இருக்கிறது.."

"அந்தக் காட்டில் திசை தெரியாது, அங்கேயே பிறந்து வளர்ந்த குறவர்கள் கூட திசை தெரியாமல் தடுமாறுவது உண்டு. அந்தக் காட்டில், திசை தெரியாமல் உங்களுக்குத் தடுமாற்றம் ஏற்பட்டால், நீங்கள் அங்கேயே உட்காருங்கள். நீங்கள் எல்லோரும் சேர்ந்து உங்கள் இசைக் கருவிகளை இசையுங்கள்,."

"அந்தக் காட்டில் வற்றாத அருவி நீர் பாய்ந்து கொண்டிருப்பதால், அந்த நிலம் செழிப்பாக இருக்கிறது. எப்போதும். அந்த நிலத்திலிருந்து வருமானம் வந்து கொண் டிருக்கிறது. அந்த செழிப்பான நிலத்தை அரசனுடைய காவலர்கள் எப்போதும் காவல் காத்துக் கொண்டு

இருக்கிறார்கள். அவர்கள் உங்கள் இசையைக் கேட்டதும் உங்களுக்கு உதவி செய்ய ஓடி வருவார்கள். "

"அந்தக் காவலர்கள், நீங்கள் பசியாறுவதற்கு நல்ல பழம் கொண்டு வருவார்கள். உங்கள் பெண்கள். தலையில் சூடிக் கொள்வதற்கு நல்ல பூக்களும் கொண்டு வருவார்கள். "

"அந்தக் காவலர்கள் உங்களை அழைத்துக் கொண்டு நீங்கள் போக வேண்டிய பாதையில் அவர்கள் உங்களுக்கு முன்னால் நடந்து போவார் கள். அவர்கள் உங்களுக்கு வழித் துணையாக உங்கள் கூடவே நெடுந்தூரம் வருவார்கள்.

"திசை தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த உங்கள் கவலைகள் நீங்கி விடும். நீங்கள் உங்கள் பிள்ளைகளோடு மன நிறைவோடு பிரயாணம் செய்யுங்கள்.."

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 271 முதல் 286 வரை.



"மா நிழல் பட்ட மரம் பயில் இறும்பின்,
ஞாயிறு தெறாஅ மாகம் நனந்தலை,
தேஎம் மருளும் அமையம் ஆயினும்,
இறாஅ வன் சிலையர் மா தேர்பு கொட்கும்,
குறவரும் மருளும் குன்றத்துப் படினே.
அகன் கண் பாறைத் துவன்றிக் கல்லென,
இயங்கல் ஓம்பி, நும் இயங்கல் தொடுமின்,
பாடுஇன் அருவிப் பயம் கெழு மீமிசை,
காடு காத்து உறையும் கானவர் உளரே,
நிலைத் துறை வழீஇய மதன் அழி மாக்கள்,
புனல் படு பூசலின், விரைந்து வல் எய்தி,
உண்டார்க்கு இனிய பழனு, கண்டோர்,
மலைதற்கு இனிய பூவும், காட்டி,
ஊறு நிரம்பிய ஆறு அவர் முந்துற,
நும்மின் நெஞ்சத்து அவலம் வீட,
இம்மென் கடும்போடு இனியிர் ஆகுவீர்."

**கதை -51.**

## வீரத்தாய்மார்கள்.

ஒரு சிறிய கிராமம்.

அந்தக் கிராமத்தில் ஒரு சிறிய வீடு. அந்த வீட்டில் ஒரு புலித் தோலை விரித்து அந்தப் புலித்தோல் மேல் ஒரு இளைஞனைப் படுக்க வைத்திருக்கிறார்கள்.

அவன் ஒரு போர் வீரன்,

அவன், ஒரு இளம் பெண்ணின் கணவன்,

அந்தச் சிறிய கிராமத்திற்குள் ஒரு புலி திடீரென்று நுழைந்து விட்டது. அந்த இளைஞன் அந்தப் புலியைக் கொல்ல அந்தப் புலியோடு சண்டை போட்டான். புலி அவனைப் பலமாகக் கடித்து விட்டது. அவன் நெஞ்சில் ஆழமான விழுப்புண்ணை ஏற்படுத்தி விட்டது அந்தப் புலி.

அந்த வீர இளைஞனுக்குப் பக்கத்தில் வீரத் தாய்மார்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அந்தத் தாய்மார்கள் வீரம் நிறைந்த பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

வீரம் நிறைந்த இந்தப் பாடல்களை, இந்த வீர இளைஞன் கேட்கட்டும் ஆழமான இந்த விழுப்புண்ணின் வலியை வீர இளைஞன் மறக்கட்டும்...இந்த வீர இளைஞ னின் விழுப்புண், விரைவில் ஆறட்டும் என்று அந்த வீரத்



தாய்மார்கள். வீரம் நிறைந்த பாடல்களை பாடிக் கொண் டிருக்கிறார்கள்.

இரணிய முட்டத்துப்<br>
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.<br>
மலைபடுகடாம்.<br>
பத்துப்பாட்டு<br>
அடிகள் - 302 முதல் 304 வரை.

"கொடுவரி பாய்ந்தென, கொழுநர் மார்பில்,
நெடு வசி விழுப் புண் தணிமார், காப்பு என,
அறல் வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல்."



## கதை -52.

## சினை.

ஒரு பெரிய காடு.

அந்தக் காட்டில், ஒரு பெரிய மரம், அந்தப் பெரிய மரம் தளிரும் மொட்டும் பூவுமாகப் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த மரத்தின் அடியில் இரண்டு யானைகள் நின்று கொண்டி ருக்கின்றன. அவர்கள் கணவனும், மனைவியும். அந்த இளம் பெண்யானை சினையாக இருக்கிறது.

அந்தப் பெரிய ஆண் யானை அந்தப் பெரிய மரத்தின் ஒரு பெரிய கிளையை ஒடிக்கிறது. தளிரும், மொட்டும், பூவுமாக இருக்கும் அந்தக் கிளையை ஒடித்து ஒடித்து அந்த ஆண் யானை தன் இளம் மனைவியின் வாயில் செல்லமாக ஊட்டிக் கொண்டிருக்கிறது.

அந்தச் சினை யானை தன் பலசாலிக் கணவன் தனக்கு பாசத்தோடு ஊட்டுவதை மகிழ்ச்சியோடு தின்று கொண்டிருக்கிறது.

ஒரு புதரில் ஒளிந்திருந்த ஒரு புலி மின்னல் வேகத்தில் வந்து அந்த ஆண் யானைக் கொன்று விட்டது.

தன் கணவன் தன் கண் எதிரில் கொல்லப்பட்ட

துயரத்தை அந்தப் பெண் யானையால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அது துக்கம் தாங்காமல் கதறி அழுகிறது. அந்தப் பெண் யானையின் அழுகைச் சத்தம் அந்தக் காட்டில் இடி முழக்கத்தைப் போல் கேட்டுக் கொண்டிருக்கிறது.

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 307 முதல் 310 வரை.



"கன்று அரைப்பட்ட கயற் தலை மடப்பிடி,
வலிக்கு வரம்பு ஆகிய கணவன் ஓம்பலின்,
ஒண் கேழ் வயப் புலி பாய்ந்தென, கிளையொடு,
நெடு வரை இயம்பும் இடி உமிழ் தழங்கு குரல்."

## கதை -53.

## மறதி நோய்.

உயரமான ஒரு மலை. அந்த மலையில் மரங்கள் நெருக்கமாக இருக்கிறது. அந்த மரங்களில் குரங்குகள், குடும்பம் குடும்பமாக உட்கார்ந்திருக்கின்றன.

ஒரு குரங்கு தனியாக ஒரு மரத்தில் உட்கார்ந்து இருக்கிறது. அது, ஒரு பெண் குரங்கு, அந்தப் பெண் குரங்குக்கு எல்லா விரல்களும் கருப்பா இருக்கு. அந்தப் பெண் குரங்குக்கு ஒரு குட்டி இருக்கு. அது வளர்ந்த குட்டி. அது வளர்ந்திருந்தாலும் அந்தக் குட்டி இன்னும் மரம் ஏறுவதற்குக் கற்றுக் கொள்ள வில்லை. அது தாய் மடியில் உட்கார்ந்திருக்கிறது. தன் மடியில் உட்கார்ந்திருக்கிற தன் குட்டியை அந்தத் தாய்க் குரங்கு ஒரு கையால் பிடித்துக் கொண்டிருக்கிறது.

அந்தத் தாய் குரங்குக்கு மறதி நோய், அது தன் குட்டியைப் பிடித்துக் கொண்டிருந்த கையை மறந்தாக்கல விட்டு விட்டது. அந்தக் குட்டிக் குரங்கு உயரமான அந்த மலையிலிருந்து பாதாளத்தில் போய் விழுந்தது.

தான் பெத்த பிள்ளையை அநியாயமாய், சாவக் கொடுத்த அந்தத் தாய் குரங்கு கூப்பாடு போட்டு கதறிக் கதறி அழுகிறது. அந்தத் தாய் குரங்கின் சொந்தக் கார குரங்குகளும், ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருக்கின் றன.



இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 311 முதல் 314 வரை.

"கைக் கோள் மறந்த கருவிரல் மந்தி,
அரு விடர் வீழ்ந்த தன் கல்லாப் பார்ப்பிற்கு,
முறி மேய் யாக்கைக் கிளையொடு துவன்றி,
சிறுமை உற்ற களையாப் பூசல்."



**கதை - 54.**

## கரை ஒதுங்கிய ஒரு யானை.

ஒரு பெரிய காடு.

அந்தக் காட்டில், ஒரு காட்டாறு ஓடுகிறது. அந்த ஆற்றில், ஒரு பெரிய ஆண் யானை, தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. அந்த ஆற்றில், திடீரென்று பெரிய வெள்ளம் வந்தது. அந்த வெள்ளத்தில், ஒரு பெரிய சுழி, அந்தச் சுழி, தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த அந்த ஆண் யானையைக் கீழே தள்ளியது. வெள்ளம். அந்த யானையை இழுத்துக் கொண்டு போய்விட்டது.

அந்த யானை, ஒரு கிராமத்தில், உயிரோடு கரை ஒதுங்கியது. அந்த யானையைப் பாகன்மார்கள் வளர்க் கிறார்கள்.

அந்த யானை, அந்தப் பாகன்மார்களிடம் கோவத்தை அடக்கிக் கொள்ள, பயிற்சி பெற்றிருக்கிறது. அந்தப் பெரிய ஆண் யானை, தொழுவில் வந்து அமை தியாக நிற்பதற்குப் பாடம் படித்துக் கொண்டிருக்கிறது.

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 325 முதல் 327 வரை

"நெடுஞ் கழிப்பட்ட கடுங்கண் வேழத்து
உரவுச் சினம் தணித்து, பெரு வெளிப் பிணிமார்,
விரவு மொழி பயிற்றும் பாகர் ஓதை.."



## கதை – 55.

## களம்.

ஒரு களம்.

அது ரொம்பப் பெரிய களம்.

அந்தப் பெரிய களத்தில் பலாப்பழங்களிலிருந்து கொட்டை களைப் பிரிக்கிற வேலை நடந்து கொண்டிருக் கிறது.

பிணையல் மாடுகள், அந்தப் பெரிய களத்தில் சுற்றிச் சுற் றி வந்து கொண்டிருக்கிறது. அந்தப் பிணையல் மாடுகள் வசக்காத இளங் காளைகள், இளைஞர்கள், அந்தப் பிணையல் மாடுகளுக்குப் பின்னால் வந்து கொண்டிருக் கிறார்கள். மீசை முளைக்காத அந்த இளைஞர்கள் காம்போடு பறித்த காந்தள் மலர்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள், அந்தக் காந்தள் மலர்களால் அந்த இளங் காளைகளை தட்டிக் கொடுத்து வேலை வாங்குகிறார்கள். அந்த இளங்காளை மாடுகளின், காலடியில் பலாப் பழங்களைப் பிளந்து பாளம் பாளமாய்ப் போட்டிருக் கிறார்கள். அந்த இளம் காளைமாடுகளின் கால் களில், மிதிபட்டு மிதிபட்டு அந்தப் பலாப்பழங்களிலிருந்து கொட்டைகள் தெறித்து ஓடுகின்றன.

பலாப் பழங்களிலிருந்து கொட்டைகளைப் பிரித்து விட்டதில், அந்த இளைஞர்களுக்கு அவ்வளவு மகிழ்ச்சி. அவர்கள், இன்றுதான் தங்களுடைய சொந்தக் காளாங் கன்றுகளைப் பிணையலில் பூட்டி வசக்கி இருக்கிறார்கள். அவர் களும் இன்றுதான் களத்து வேலைகளைச் சுயமாகப் பழகி இருக்கிறார்கள். அந்த மகிழ்ச்சியில் அவர்கள் பலாக் கொட்டைகளை அள்ளி ஒருத்தர் மேல் ஒருத்தர் எறிந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மகிழ்ச்சி ஆரவாரம் அந்தக் களத்தில் ரொம்ப நேரமாய்க் கேட்டுக் கொண்டிருந்தது.

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர்பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 336 முதல் 339 வரை.



"காந்தள் துடுப்பின் கமழ் மடல் ஓச்சி,
வண் கோள் பலவின் சுளை விளை தீம்பழம்,
உண்டு படு மிச்சில் காழ் பயன் கொண்மார்,
கன்று கடாஅ உறுக்கும் மாஅர் ஓதை.."

### கதை -56.

## ஒரு ஆண் மான்.

ஒரு பெரிய காடு.

அந்தக் காட்டில் இரண்டு மான்கள் தனியாக நின்று கொண்டு இருந்தது. அவர்கள் கணவனும், மனைவியும், அவர்கள் முத்தமிட்டுக் கொண்டும், கிச்சங் காட்டிக் கொண்டும் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

இந்த மான்களைக் குறி வைத்து ஒரு புலி பாய்ந்து வந்தது.

அந்த மான்கள், புலியைப் பார்த்ததும் உயிருக்குப் பயந்து ஆளுக்கொரு திசையில் ஓடியது.

அந்தப் புலி பெண் மானை மட்டும் துரத்திக் கொண்டு ஓடியது. அது அந்தப் பெண் மானைக் கவ்விக் கொன்று விட்டது.

அந்த ஆண் மான் அந்தப் பெரிய காட்டில் தன்னந் தனியாக நின்று கொண்டு இருக்கிறது. அது தன் மனைவியைத் தன்னிடம் வரும்படி நெஞ்சை உருக்கும் சோகமான குரலில் அழைத்துக் கொண்டிருக்கிறது.

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 404 முதல் 405 வரை.



"புலி உற, வெறுத்த தன் வீழ் பிணை உள்ளி,
கலை நின்று விளிக்கும் கானம் ஊழ் இறந்து.."

## கதை – 57.
## ஒரு கடைத் தெரு.

ஒரு காடு.

அந்தக் காட்டில் ஒரு மராமரம் இருக்கிறது. அந்த மரம், செவத்தச் செவத்தப் பூவாப் பூத்திருக்கிறது, அந்த மராமரத்தின் நிழலில் காட்டுப் பசுக்கள் படுத்திருக்கின்றன,

ஒரு வேடன் அந்தக் காட்டில் மிருகங்களை வேட்டையாட வந்திருக்கிறான். அந்த வேடனைப் பார்த்ததும், படுத்திருந்த அந்தக் காட்டுப் பசுக்கள் எழுந்து ஓடுகின்றன. ஒரு சின்னக் கன்றுக் குட்டி மட்டும் ஓட முடியாமல் மிரண்டு போய் அங்கேயே நின்று கொண்டிருந்தது. அந்த வேடன் அந்தக் கன்று குட்டியைத் தூக்கி அவன் தோள் மேல் வைத்துக் கொண்டான்.

இது காஞ்சிபுரம்...

இது மன்னன் நன்னனுக்குச் சொந்தமானது.

இந்தப் பெரிய நகரத்தில் ஒரு பெரிய கடைத் தெரு இருக்கிறது. அந்தப் பெரிய கடைத் தெரு, மன்னன் நன்னனின் அரண் மனை முற்றத்தில் இருந்து ஆரம்பமாகிறது.

இந்தக் கடைத் தெருவில் என்ன பொருள்



வேண்டுமானாலும், வாங்கலாம்.

முத்துக்கள் வாங்கலாம்..

மாணிக்கக் கற்கள் வாங்கலாம்..

நவரத்தின மாலைகளும் வாங்கலாம்..

யானைக் குட்டி கிடைக்கிறது.

கரடிக் குட்டியும், கிடைக்கிறது.

யானைத் தந்தங்களில், முத்துக்கள் விளைந்திருக்குமே... அந்த அபூர்வமான யானைத் தந்தங்கள் இந்தப் பெரிய கடைத் தெருவில் விற்பனைக்காக அம்பாரம் அம்பாரமாக குவித்து வைக்கப்பட்டிருக்கிறது.

மான் வாங்கலாம்...

மலை ஆடு வாங்கலாம்..

ஆண் உடும்பும் வாங்கலாம்...

மயில்கள்விற்பனைக்கு வந்திருக்கிறது.

காட்டுக் கோழிகளும் விற்பனைக்கு வந்திருக்கின்றன.

நல்ல பாம்பைக் கடித்துக் கொல்லுமே கீரிப் பிள்ளை.. அந்தக் கீரிப் பிள்ளைகளும் இங்கே விற்பனைக்கு வந்திருக்கிறது...

மாம்பழம் கிடைக்கிறது.

பலாப்பழமும் கிடைக்கிறது.

சந்தனமும், கற்பூரமும், தேனும், கல்கண்டும், தயிரும், கள்ளும், இந்தப் பெரிய கடைத் தெருவில் எப்போதும் கிடைக்கிறது.

வேறு என்ன பொருள் வேண்டுமானாலும் இங்கே வாங்க முடியும்.

ஒரு காட்டில் ஒரு மராமரத்தின் நிழலில் நின்று

கொண்டிருந்த ஒரு காட்டுப் பசுவின் ஒரு கன்றுக் குட்டியை ஒரு வேடன் தூக்கி அவன் தோள் மேல் வைத்தானே... அந்தக் கன்று குட்டியும் இந்தப் பெரிய கடைத் தெருவில், விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இரணிய முட்டத்துப்
பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.
மலைபடுகடாம்.
பத்துப்பாட்டு
அடிகள் - 498 முதல் 525 வரை.



"எரி கான்றன்ன பூஞ் சினை மராஅத்து,
தொழுதி போக வலிந்து அகப்பட்ட,
மட நடை ஆமான், கயமுனிக் குழவி,
ஊமை எண்கின் குடாவடிக் குருளை,
மீமிசைக் கொண்ட கவர் பரிக் கொடுந்தாள்,
வரை வாழ் வருடை வன் தலை மாத்தகர்,
அரவுக் குறும்பு எறிந்த சிறு கண் தீர்வை,
பரல் தவழ் உடும்பின் கொடுந் தாள் ஏற்றை,
வரைப் பொலிந்து இயலும் மடக் கண் மஞ்ஞை,
கானக் கோழி கவர் குரல் சேவல்,
கானப் பலவின் முழவு மருள் பெரும் பழம்,
இடிக் கலப்பு அன்ன, நறு வடி மாவின்,
பரூஉப் பளிங்கு உதிர்த்த, பல உறு திரு மணி,
குரூஉப் புலி பொருத புண் கூர் யானை,
முத்துடை மருப்பின், முழு வலி மிகு திரள்,
நாகம், திலகம், நறுங் காழ் ஆரம்,
கருங் கொடி மிளகின் காய்த் துணர்ப் பசுங் கறி,
திருந்து அமை விளைந்த தேக் கள் தேறல்,
கான் நிலை எருமைக் கழை பெய் தீம் தயிர்,
நீல் நிற ஓரி பாய்ந்தென, நெடுவரை,
நேமியின் செல்லும் நெய்க் கண் இறால்.."

## நன்றி..!

*கல்யாணி சுயம்புலிங்கம்.*

M. S. *ரிஷி அவர்கள்.*

S. *செல்வம் அவர்கள்,*

*லட்சுமி பிரியா செல்வம் அவர்கள்,*

S. *கணேஷ் குமார் அவர்கள்*

*நாகஜோதி கணேஷ் குமார் அவர்கள்,*

S. *தவயோக ராஜன் அவர்கள்,*

*பேபி* S. *சஹானா*

*பேபி* G. *மோனிகா*



## M S R **கிரியேஷன் வெளியிட்டுள்ள புத்தகங்கள்.**

*1)* நற்றிணை கதைகள் நூறு

- மு. சுயம்புலிங்கம்

*2)* குறுந்தொகை கதைகள் எழுபத்தைந்து

- மு, சுயம்புலிங்கம்

*3)* ஐங்குறுநூறு கதைகள் அறுபத்தொன்பது..

- மு, சுயம்புலிங்கம்

*4)* நற்றிணை கதைகள் அறுபத்து மூன்று

- மு, சுயம்புலிங்கம்

தமிழ் அறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேற்சொன்ன புத்தகங்களின் திருத்திய பதிப்புகள் Amazon / Kindle, மற்றும் M S R Creation website ஒன்றை உருவாக்கி அதில் அனைவரும் இலவசமாக படித்துப் பயன்பெறும் வகையில், விரைவில் பதிவேற்றம் செய்ய உள்ளோம்.

அனைவரும் படித்துப் பயன் பெறுங்கள்

தங்கள் மேலான கருத்துக்களை எங்களுக்குத் தெரியப்படுத்தவும.

M S R **கிரியேஷன்**

M S R **கிரியேஷன்.** திரு. மு. சுயம்புலிங்கம் அவர்களின் மேற் சொன்ன ஐந்து புத்தகங்களை வெளியிடக் காரணம், அவர் என்னுடைய தந்தை என்பதற்காக அல்ல, அவர் தமிழ் இலக்கியங்களிலிருந்து, கதையைக் கண்டுபிடித்து எளிய தமிழில், எல்லோருக்கும் புரியும்படி அழகிய தலைப்புகளில் எழுதியதுதான். ஒரே காரணம்.

இந்தக் கதைகள் அனைத்தும், கவிதை போலவும், கட்டுரை போலவும், சிறுகதை போலவும், தமிழர் வரலாற்றை, வாழ்க்கையை எளிய நடையில், சொல்வது சிறப்பு.

இந் நூல்களை வெளியிட்டு M S R Creation பெருமை தேடிக்கொள்கிறது.

நன்றி..!

**மு.சு. ரிஷி**